(152) MSS 80

131

[illegible]

(cont)

Manuscript collections
of Mr Daniel
Neyyoor K.K. Dt

Kindly lent by his son

Dr. D. Simon LIM

அகஸ்தியர் [illegible] 300

29-6-62

(152)

அருபத்திலுவ

சிகப்புக்கு நிதானம்.

(தொடர்ச்சி)

247. தெரியவே செந்திருதான் உரைத்த மார்க்கம்
தேசமதில் கமுலதை லொத்திகொண்டுவந்து
அரியவே வெவ்வீரில் நாளொன்றா நி
அதையிறுத்து தெளித்தெடுத்து மூன்று நாளும்
சரியாக அந்தி சந்தி ஆற நேரம்
தாய் தனக்கு மிளகு மஞ்சள் தவிர்த்து தள்ளு
பொரியுமே சிகப்பு வகை எல்லாந்தானும்
போய்விடும் உண்மையிது சூக்ஷந்தானே.

சிகப்பு தீரைக்கு உள்ளிக் கஷாயம்.

248. தானென்ற முருங்கைப்பூ முளையிலுண்டான
தக்கதோர் புறத்தி மண்டை கருஞ்சூரைப்பட்டை
ஊனென்ற சிம்ம சுடர் மூலியொடு
உள்ளிரண்டும் உழவாயும் இடிநேர் கூட்டி
மானென்ற பைங்கொடியாளின்ற சேய்க்கு
பற்பமதாய் கஷாயமிட்டு ஏலந்தாக்கி
தேனென்ற பனைவெல்லமும் கலந்துக் கூட்டு.
தேகமதில் காணுது சிகப்புதானே.

249. தானென்ற சிகப்பு வகை தீரைபோகும்
தயவான தேகமதில் தளப்பு தீரும்
தேனேதான் வாந்தியமும் தீரைக்குத்தும
திரண்ட பிணி சிகப்பதிலே தீரை போகும்
ஊனேதான் தேங்கெண்ணெய் வைத்து மூழ்க
உற்றிலங்கும் தேகமது பிரகாசிக்கும்
வானேதான் உண்மையிது பிசகிடாது
வகையறிந்து கும்பமுனி அருளினரே

வேறு கஷாயம்.

250. அருளினர் இன்னுமொரு கஷாயஞ் சொல்வேன்
அருளான சிகப்பொடு பிரளிசீர
திரளை திரளவே, உள்ளி ரண்டும் முருங்கைப்பூவும்
நிலையான மதுரமொடு மாயம் சூரை
திரளவே கருஞ்சீரம் அரத்தை தானும்
திகழ்ந்ததோர் முசுட்டைத் தண்டும் கூட்டி
உருவான திரிப்பன்புல் விஷ்ணுக் கிராந்தி

251. மட்டையொடு நல்துளசி சமனும் வாங்கி

மைந்தனே கஷாயமிட்டங்கருந்தம் போது

திட்டமுடன் ரோசனையும் உரைத்துக் கொள்ள

சிறுவருக்கு எழுந்த சிகப்பு அறுபத்திலும்

பட்டமுடன் பிரளிதொந்தம் தீரை தோஷம்

மறக்குமை பறக்கும்ப்பா பாலர்தன் கணையமிட்டு

துட்ட மற்றமானது போல் சூக்ஷம் சொன்னேன்

தொடர்ந்து வரும் நோய்களுக்கு கஷாயம் கேளே.

எல்லா சிகப்புக்கும் தெற்றி கஷாயம்.

252. கேளே நீ தெற்றியது சமூலம் வாங்கி

கெறுவான நல்துளசி ஆடாதோடை

ஆளே நீ பொன் நெரிஞ்சி அமிர்த வள்ளி

அறுகு ரண்டு பேய்புடோலம் வேப்பின் பட்டை

மீளே நீ ஈருள்ளி சிவனார் வேம்பு

மிக்கதொரு சீலாந்தி சூரைப்பட்டை

தாளே நீ கெருடனுட கொடியின் வேரும்

தாறு வேர் சாரணையின் வேருங்கூட்டே

253. கூட்டவே வடலி மட்டை திரிப்பன் புல்லு

சூமான செம்பருத்தி பூவுதானும்

வாட்டே நீ வறட்டு மஞ்சள் விஷ்ணுக் கிராந்தி

வகையான நற்சீரம் கரிய சீரம்

ஊட்டே நீ நல்மிளகு மாயக்காயும்

உறுதியுள்ள கார்கோலு கொத்தமல்லி

தீட்டே நீ அதிமதுரம் சித்தரத்தை

திரிபலையின் தோடுடனே சுக்குமாமே.

254. ஆமென்ற ரெத்த சந்தம் பூதா விருக்ஷம்

அரும் பிது ரோணியுடன் சாத்திர பேதி

வேமே நீ வகையொன்று கழஞ்சொன்றாக

வெண்திரிசாதி வகை கழஞ்சு பாதி

போமே கேள் கஷாயமிட்டு எட்டொன்றாக்கி

புதிய பசு ரோசனையும் கூடதாக்கி

தாமே போம் சிகப்பு வகை அறுபத்திலும்

தக்கதொரு கரப்பன் வகை அன்பத்தைந்தே.

255. ஐந்துடனே அக்கரமும் சொறி சிரங்கு அரிய

மண்டை காரப்பனொடு விசர்ப்பம் தீரும்

தொந்தமென்ற சிகப்பில் வரும் பனியும் மாறும்
சுடராது வீக்கமறும் ரூக்ஷம் ரூக்ஷம்
கந்தமதும் தனப்பு பொன்னி கிரந்தி மாசும்
கனமான கஷாயமிது போலுண்டோ
விந்தையுடன் சொல்லி விட்டேன் மேலுங் கேளு
விபரமெல்லாம் வெளியாக விம்பு வேனே.

வேறு தெற்றிவேர் கஷாயம்.

256. விளம்புவேன் தெற்றிவேர் வேப்பின் பட்டை
விரிந்த நல்ல துளசியுடன் அமிர்து வள்ளி
புளம்பு வேன் முள்நெரிஞ்சி பொன்நெரிஞ்சி
புளித முறம் ஈரவுள்ளி கருவிலாஞ்சி
அளம்புகின்ற சிவன் வேம்பு ஆடாதோடை
அரியதொரு பூவரசு சூரைப்பட்டை
களம்புகின்ற பேய்புடோலம் கருத்த சுண்டை
கனமான கெருடகிட கொடியின் வேரே.

257. வேராகும் தாருவேர் அமுகின் வேரு
வெள்ளறுகு தாருவேர் திரிப்பன்புல்லு
சேராது கற்றாழைச்சருகு தானும்
சொல்லிவிட்டேன் பனங்கத்திரி நீர்நள்ளி
சீராகும் சுக்குடன் சீனப்பாவும்
சித்தரத்தை திற்பிலியின் மூலந்தானும்
வாரான நாயுருவி விஷ்ணு கிராந்தி
வருஞ்சுக்கு கருஞ்சீரகம் சிறிய சீரம்

258, சீரகமும் கார்கோல் கொத்தமல்லி
திரிபலையின் தோடுடனே வறட்டு மஞ்சள்
பாரகமே நல்மிளகு மாயக்காயும்
பன்பாக வகை வகைக்கு கழஞ்சதாக
தாரகமே முச்சாதி வகை கழஞ்சு பாதி
தானிதனைக் கஷாயமிட்டு அருந்தும்போது
ஆரான சொறி சிரங்கு வீக்கந்தீரும்
அன்பத்தி ஐந்து வகை கரப்பன் போமே.

259. போகுமே சிகப்பு வகை அறுபன்னொன்றும்
பொல்லாத கிரந்தியுடன் பறங்கிப்புண்ணும்
வேகுமே விஷ பாகம் தனப்பு பொன்னி

விசற்பமுடன் படுவனத்தி ஹுடு மாறும்
பாகமே பறங்கி சுரம் அறைந்தேன் மன்னுள்
பாதலகர்க்கு நோயறிந்து பதமாய்ச் செய்யில்
ஆகுமே பண்டிதருக்கரியச் சொன்னேன்
ஆகமத்தின் முறையறிவோர்க்களவுதானே.

64 சிகப்புக்கும் தெற்றி வேர் கஷாயம்.

260. அளவில்லா சிகப்பு வகை அடக்கம் போக
அறைகிறேன் தெற்றியது சமூலந்தானும்
களவில்லா தெற்றி மலர் நன்றி ஞரை
கனமான செம்பருத்தி பூவுதானும்
பழகியதோர் அதிமதுரக்கம்பிளேடு
பண்பான நற்துளசி ஈரவுள்ளி
நளவில்லா நத்தையென்ற சூரிவேரும்
நலமாகச் சொல்லுகிறேன் முத்தக்காசே.

261. காசாகும் பீர்க்கிலையுடவேருதானும்
கனமான மாதளையின் பிஞ்சும் பூவும்
வாசமென்ற செம்பொன்னின் நெரிஞ்சியோடு
வல்லாரை அறுகது தான் ரண்டுங்கூட
தாசமென்ற வெண்குன்றி நாகவல்லி
தகமையென்ற சொல்லு தலேயூரிவேரே.

262. வேரு வகை சொல்லி விட்டேன் விபரமாக
விளம்புகிறேன் இலிய பூவரசின் பட்டை
பாரிலுள்ள இசங்குடனே ஆடாதோடை
பகர்ந்துடனே விளங்குகின்ற இண்டுக் கூட்டி
நேராகத் தூதளையும் சிறிய சீரம்
நெருங்குகின்ற கார்கோல் அரத்தைதானும்
கரியதோர் மிளகுடன் கொத்தமல்லி
கறுத்தொரு சீரகமும் கடுக்காய் தோடே.

263. தோடுடனே சொல்லுகிறேன் சாதி மூன்று
சொல்லுகிறேன் கடுகு ரோகணி நிலத்து வாலுக
வாடியே உலர்ந்ததொரு ரெத்த சந்தம்/வன்மையாய்
வளர்ந்ததொரு பூதா விருகூடும்
கூடியதோர் சாஸ்திரத்தின் பேதி தானும்

குணமாகவே விளங்கும் மாயக்காயும்
நாடியே வகையொன்று சமனதாக
நாட்டுகிறேன் நன்டறு படியும் நீரே.

264. நீருதனை விட்டுடனே எட்டொன்றுக்கி
நிறையிரண்டு குடமாக யிறுத்துக் கொண்டு
பாருள்ளே ரோசனையும் கூடதாக்கி
பாகமாம் பாலகர்க்கு அருந்தும்போது
கோரமாம் சிகப்பு வகை இல்லாந் தீரும்
கொடியதொரு நீர்க்கட்டு சூலை தீரும்
ஓரமாம் பொக்களுடன் ஊரல் தீரும்
ஊக்கலுடன் காந்தல் நோல் உரிவும் போச்சே.

265. போச்சப்பா சொறிகளுடன் சிரங்குதீரும்
பொல்லாத தனைப்பு வகை எல்லாந் தீரும்
ஆச்சப்பா வாய்ப்புப்பு நாக்குப் புண்ணு
அடங்காத வாய்க்கிரந்தி அற்றுப்போகும்
நீச்சப்பா தொண்மைப்புண் வாய் நீருறல்
நில்லாது தலைக் கரப்பன் நாவறட்சை
வேச்சப்பா பிணிகளெல்லாம் அகன்று போகும்
வேதநூல் விதியறிந்த விரித்துக் கூறே.

உ
நின்பாதி கிஷாயம்.

266. கூறுவேன் வேப்பிட்ட பட்டைதானும்
குணமான அமிர்துவள்ளி ஆடாதோடை
அறவே துதேளையும் கருத்த கண்டை
அப்பவே கருஞ்சூரை கருவிலாஞ்சி
வீறுள்ள பேய்ப்புடோலம் சிவனார் வேம்பு
விளம்புகிறேன் முள் நெரிஞ்சி அரகுரண்டு
தேறவே பிரம்பிட்ட கிழங்கு தானும்
திறமான கொட்டமுடன் மதுரமாமே.

267. மதுரமுடன் மல்லி வில்லை அமுக்குரந்தான்
மதி சீனப்பாவுடன் கார் கோலு
இதரமுள்ள வேர்க்கொம்பு சித்தாமுட்டி
இசங்கு திப்பிலை கெருடக் கொடி நேராக
குதிரமுடன் கஷாயமிட்டு குடி நீருட்ட

[illegible]

அதிருமடா கரப்பனுடன் சொறி சிரங்கு

அடங்காத செவ்வாற்ப்பு அரையாப்பாமே.

268. ஆப்பென்ற புற்றுடனே ஊரல் கொக்கல்

அடர் சூலை விஷ பாகம் பருவன் பொன்னி

வேப்பென்ற விசர்ப்பமுடனீர்க்கெட்டு

விள்ளுகிறேன் பஞ்சவீரப்பொடிதாக்க

கோப்பென்ற அரிகிரந்தி பரிகிரந்தி

கொடியதொரு பறங்கியுடன் கிரந்தி மாறும்

பாப்பென்ற பிணிக்கெல்லாம் பறந்து போகும்

பாடுகிறேன் பால வாதக்கட்டும் போமே.

ஒரிய நின்பாதி கஉடி ராயம்.

269. போமப்பா உலகத்தில் மதலைக்கெல்லாம்

பொங்கி வந்த சிகப்பதிலே பருவன் பொன்னி

வேமப்பா தீர்வதற்கு வேப்பின் பட்டை

வெற்றியுள்ள அமிர்த பூவரசின் தோலும்

ஆமப்பா குறை வேர் கருவிலாஞ்சி

ஆடாதோடை வேருடவே பறங்கிப்பட்டை

தா மப்பா கொடி மூலம் கழந்த சுள்ளை

தா க்கு கருஞ்சீரகமும் நெரிஞ்சி கூட்டே.

270. கூட்டடா நல் மிளகு திரிபலைத்தோல்

கொடிய தெற்றி சமூலமுடன் மஜ்ரம் குக்கில்.

நாட்டடா அசுவ கெந்தம் மல்லி தேற்றான்

நல்ல கொட்டம் புடோல முடன் வறட்டு மஞ்சள்

பாட்டடா சொன்னபடி இருபத்திரெண்டும்

பக்குவமாய் தான் வகைக்கு சரியாய் வாங்கி

போட்டடா உரல்தனிலே சதைப்பாண்டம்

புதமை பெற அப்புவிட்டு எட்டொன்றுக்கே

271. ஆக்கிடவே பதமாக அரிந்து கொண்டு

அப்பனே சீரகத்தூள் தூவிக் கொள்ள

நீக்கிடுமே சிகப்பு தொகை அறபத்திஅரும்

நில்லாத பருவனுடன் பிளவை சூலை

போக்கிடுமே அரையாப்பு பறங்கிப்புண்ணு

புதல்வர் பனிவிட்டு விடும் குட்டமெல்லாம் ஓ

வாங்கிவிடும் பவங்கிரங்கள் [illegible] [illegible]

வராது விசற்பமதும் அஷ்டமாலை.

272. அஷ்டமதில் மாலையொடு கர்ணிகமும்

காணுத லிங்கப்புற்று கிரந்திப்புற்று

[illegible]

[illegible]

விண்டதொரு கரப்பன் வகை அஷ்பத்தி ஐந்தும்

விட்டிடுமே கிரந்தியெட்டும் செவ்வாற் பென்றும்

தொண்டலெடு சூலையுடன் காதினால்

நடர்ச்சி விடும் சீழ்பாச்சல் மாவு பன்றும்

அண்டருமே நின்பாதிக் கஷாயந்தன்னை

அறிந்துரைத்தார் வேகு நோய்கள் களறுபோமே.

தெற்றிப்பூ கஷாயம்.

273, போகுமே தெற்றி மலர் பிச்சிமொட்டு

போர்த்த ஆவாரை மலருடனே முதலிப்பூவும்

ஆகமே தாமரையின் மலரினேடு

ஆனதொரு தோடை மலர் செம்பருத்தி

வேகமுடன் கொத்தமல்லி சிறு சீர் சந்தம்

வெற்றியுள்ள குரை வேர் கார்கோல் ஏலம்

காகமென்ற சீரகமும் மதுரம் பூலா

கடியதோர் பேதியொடு சிவந்திருள்ளி

274. உள்ளியொடு ரோகணி முந்திரியுங் கூட்டு

உண்மையுடன் கஷாயமிட்டு ரோசனையுந் தாக்கி

தள்ளிடவே பாலகர்க்கங்காறு நேரம்

சாந்தமாம் சிகப்பு தொகை அஷ்டபத்திலும்

எள்ளளவும் பிசகாது சங்கிவேர்வை

எடுத்தமலக்கட்டுடனே சிறு நீர்போகும்

தெள்ளமிர்தே தெற்றி மலர் கஷாயமிந்த

தேசத்தில் தமிழ் முனிவர் பாடினரே.

சிறிய சந்தனுதி கஷாயம்.

275. பாடினர் சந்தனுதிக் கஷாயமொன்று

பருத்த சந்தம் ரண்டு நன்றிகரிய குரை

தேடினர் முந்திரிகை மதுரம் ஸ்ரீ முத்தம்

திறமான பூலாவும் சாஸ்திரபேதி

கூடினர் குறத்திப் பச்சை சூரை கட்டி

குறுக்கியே கஷாயமிட்டு அருந்தும் போது

வாடினர் இல்லையடா பாலகர்க்கு

வந்ததொரு சிகப்பு வகை வழுவிப்போமே.

276. வழுவிப் போம் மூன்று நாள் ஆறுநேரம்

வார்த்தருந்த எட்டெட்டு சிகப்பு பொக்கல்

தழுவியதோர் தலைப்புடனே ஊரல் மாறும்

தாழ்வில்லா வாயில் புண்ணு சிரங்குந் தீரும்

அழுகியதோர் கிரந்தியுடல் கரமுந்தீரும்

அக்கரங்கள் ஆனதுவும் அகன்று போகும்

பழுதில்லா மலை முனிவர் பகர்ந்ததிந்த

பாங்கான நூலணுவும் பிசகிடாதே.

வாத சிகப்புக்கு கஷாயம்.

277. பிசகாமல் அரிதகியும் சிவதை வாகை

பிலமான பூவரசு கொடி நன்னரி

அசையாத கருஞ்சூரை சித்தா முட்டி

அப்பனே மிளகு கருஞ்சூரை கட்டி

நசையாமல் கற்சீரம் கொத்தமல்லி

நன்றாகக் கூட்டியெல்லாம் சதைத்துப் போட்டு

பசயாமல் கஷாயமிட்டு குளிகைதாக்கி

பாலகர்க்கு ஊட்டிடவே சிகப்பு போமே.

278. போகுமே வாதமதில் சிகப்பதெல்லாம்

புதல்வருட காயமதில் பொன்னிதீரும்

ஏகுமே சூலை முதல் நீர்கள் தீரும்

என்ன சொல்வேன் கஷாயமதில் வீரந்தானும்

ஊகுமே சிகப்பதெல்லாம் சிதறிப் போகும்

சூக்ஷமதாய் தீர்ந்து விடும் தெளிவதாக

ஆகுமே கரப்பனொடு பனிகள் தீரும்

அடுத்த மலக்கட்டு சொறி குணமதாமே.

பித்த சிகப்புக்கு கஷாயம்.

270. குணமான வில்லை வேர் சித்தா முட்டி

குளிர்ந்த தெற்றி மலருடனே பிச்சிமொட்டு

நிணமான பருத்தி மலர் ஆடாதோடை

நிலைட்டை விளைந்துக் கிராந்தியொடு தளையின் பத்திரம்

மணமான கொத்தமல்லி சிறு சீர் ஏலம்

மகிழ்ந்த சுக்கு நெல்பொரியும் அமிர்தம் கூட்டி

குணமாகப் புவரசு கறுத்த கூர

திரண்ட சந்தம் ரண்டுடனே மதுரம் பூலா

280. மதுரமொடு சாத்திரமாம் பேதி கொட்டம்

மருதளசி சிறு நெரிஞ்சி அருகு ரண்டும்

சதுரமுடன் கொடி மூலம் தென்னை வடு

சதா வேலிக்கிழங்குடனே நெரிஞ்சி முள்ளும்

உதிரமென்ற சாரணை வேர் திரிப்பன் புல்லும்

உற்ற நீர்பப் பட்சாட்புடன் தோடைவேரும்

மிதிரமென்ற மாதளையின் மலரோடொப்பம்

மிகவுமொன்றுய்க் கூட்டியிறு கஷாயத்தாக்கே.

281. ஆக்கியதோர் கஷாயமதை அருந்தும்போது

அடவாவ் பித்தத்தின் சிகப்பதெல்லாம்

நீக்கியதோர் வீக்கமொரு சிறு நீர் கட்டும்

நிலையதான விஷ பாகம் சபநீர் சல்வி

வாக்குடனே ஆறு தினம் உண்ணும்போது

வாராது முன்னோய்கள் வளமையாக

தூக்கியதோர் சிகப்பு தொகை உஷ்ணக்காச்சல்

சூக்ஷமதாய் திரும்பு சூக்ஷந்தானே.

சிலேஷ்றபன சிகப்புக்கு கஷாயமும் குளிகையும்.

282. சூக்ஷமாம் சிலேத்பனத்தின் சிகப்புக்கெல்லாம்

சொல்லுக்றேன் தூதுவளை மூலம் வாங்கி

சூச்சியுடன் அப்புவிட்டு எட்டொன்றுக்கி

அருந்திடவே சங்கலவு குளிகை கேரு

தாச்சியில்லா தெந்தியுடன் கருஞ்சூரைத் தோல்

தாய் முலைப்பால் தன்னுடன் கரைத்தருட்டி

மாச்சியுடன் கரைத்தருந்த முன்போ சொல்ல

மகத்தான பிணி நீங்கும் மகிழ்ச்சியாமே.

சிறிய நீர்பாதி கஷாயம்.

283. ஆமப்பா சிலருக்கு சிகப்பு ரோகம்

அவனியெல்லாம் அடக்கி நின்ற அதிலன் துன்பம்

ஏமப்பா படுவனெடு வீக்கம் பொன்னி
இயல்வான சிரங்கு பனி கரப்பனெடு
நாமப்பாகிரந்தி பல நோய்கள் தீர
நன்மையுடன் நிர்பாதிக்கஷாயங் கேரு
தாமப்பா நிர்பத்தோல் ஆடாதோடை
தருவான கரத்தை சுண்டைபுடோலந்தானே.

284. தானுன தெற்றிவேர் இலையும் பூவும்
தக்கதொரு திரிபலையும் சுக்கு மஞ்சள்
ஏனை கருஞ்சீரம் வுக்கிலப் பட்டை
எடுத்திடவே கருஞ்சூரை அமுக்கூர வேரும்
பானுன வகைக்கு ஒரு சமனுய் வாங்கி
பாணியிற்படியளந்து எட்டொன்ருக்கி
தேனுன சிறு சீரம் மேலே தூவி
சொன்னதொரு பாலகர்க்குக் கொடுத்திடாயே.

287. நோயான கிரந்தியதை இரு நான்குந்தான்
நனுவக்சமாம் சிகப்பு நோய் அழுத்திலும்
தாயான அக்கரமும் பிளவை ஊலை
தனிந்து வந்த நீரதைப்பு விஷ பாகங்கள்
வேயான அலர்க்கிரந்தி உள்ளு நோயும்
வெருண்ட பல உள் சிரங்கு கிருமி நோயும்
ஈயான அண்டத்தில் கிரந்தியோடு
இன்னும் போம் பலநோய்கள் இசம்புவேனே.

சிகப்பில் சன்னி சுரம் முட்டோரம் தீர கஷாயம்.

289. செப்புவேன் சிகப்பில் வரும் சன்னிக்கெல்லாம்
சீரான கஷாயமொன்று சிறந்த கேளு
ஒப்புவேன் நிலவேரு தாருவேரு
உற்றதொரு முசிறு முட்டை விடந்தைப்பட்டை
தப்பவே கொடி குறை முருங்கைப் பூவும்
தக்க இஞ்சி ஏலமுடன் உள்ளிறுபன்
கப்புடனே சிறு தேக்கு அரத்தைக் கட்டி
கஷாயமிட்டு எட்டொன்ருய் இறுத்துக் கொள்ளே

290.

கொள்ளவே மூன்றரை நாள் இருநேரந்தான்
குறையாமல் பால்கர்க்கங் கருந்தம்போதம்
தள்ளியே பறக்குமடா சிகப்பில் தோஷம்
தடருகின்ற குட்டோரமுடன் சன்னி தீரும்
விள்ளவே சுரமுடனே கபமும் இக்கின்
விட்டு விடும் கடல் தேப்புக்கும் வீச்சு
கள்ளமே இல் லையடா வேர்வை தீரும்
கூட்டறிந்த செய்தவர்க்குக் கருத்துள்ளோரே.

61. சிகப்புக்கும் வேடு.

291. கருத்த கந்து வந்ததொரு சிகப்புத்தீர
கடல்வர்ணன் சொன்ன மொழி பிசகிடாமல்
விரும்புகின்ற செம்பருத்தி பூவரசு
மிகுந்த இலை பூவரசன் பட்டை கூரை
பெருத்து நின்று சுருங்கி நிற்கும் குறத்தி மூலி
பெரிய வெற்றிலை துளசி தெற்றி ஈரவுள்ளி
குருத்துயர்ந்த வளருகின்ற சிறு செந்நெரிஞ்சி
கொடி மூலி மிளகு ரண்டு சீரம் கூட்டே.

292. கூட்டியதோர் மருந்ததனைப்பொடித்தரிந்து
கூசாமல் பாண்டமொன்றில் சலத்தைவிட்டு
நாட்டியதோர் வெண்சீலை வேருகட்டு
நலமாக கொங்கைப் பால் மருந்தில் தூவி
மூட்டியதோர் வேடத்தின் மேல் மருந்தைவைத்து
முறையாகமேல் மூடி அவித்திறக்கி
நீட்டியதோர் கையதிலும் பிழிந்திருத்த
நிசமாக ரோசனையும் கூடத்தாக்கே.

அனுபானம்.

293. தாக்கிடவே சிகப்பு ஜகை 34-ரிகும்
தவர்ந்து விரும் தீரையது தொடர்ந்து தாளும்
நீக்கிவிடும் ஏலம் இந்த காயந்தாலும்
நிசமாக இடித்த பொடி எடுத்துப் போடு
வாக்குடனே சிகப்பதிலேதீரை போகும்
வகுத்த மலக்கட்டுடனே சலக்கடாளும்

போக்கிவிடும் ரோகணியும் கருக்காய் வளைகை

புகலுகின்ற சிவதை சமன் பொடித்துப் போடே.

சிகப்பில் கழிச்சலுக்கு வேரு.

294. போட்டிடவே மலமிறங்கும் சலமிறங்கும்

புதல்வருட சிகப்பதில் கழிச்சல் கண்டால்

கூட்டிடவே மாதளையின் இலையுமுத்தம்

கொம்மட்டி கொங்கைபால் வேடவித்து புழிந்திறுத்து

ஊட்டிடவே சிகப்பதிலே கழிச்சல் ரெத்தம்

ஓடிவிடும் மாத்திரையும் அறிந்து தாக்கு

நாட்டியதோர் சிகப்பதிலே சன்னி தீர

நலமாக வேடதொன்று நாட்டுறேனே.

சிகப்பில் சன்னிக்கு வேரு.

295. நாட்டுகிறேன் முருங்கைப்பூ வெள்ளுள்ளி

நல்லதொரு தும்பைப் பூ இலையுமாக

காட்டிலுள்ள கொழிஞ்சி வேர்கொலியுங் கூட்டி

கணக்காக ஒரு நிறையாய் சுகைத்த வாரி

ஏட்டிலுள்ள முறை போலெ வேரு கட்டி

இளமுலைப்பால் தனில் விரவிவேட்டில் வைத்து

பாட்டிலுள்ள படியாக சட்டி மூடி

பதமாக அவித்திறக்கிபுழிந்து கொள்ளே.

296. கொள்ளவே தயிலமொடு மாத்திரையுங் கூட்டி

கூறுவ பாலகர்க்கங் கூட்டும் போது

துள்ளியே பறக்குமடா சிகப்பில் சல்வி

தொடர்ந்த பல சுரமுடனே வலிகள் வீச்சு

கள்ளமே இல்லையடா விறையல் விக்கல்

காணுமல் ஓடிவிடும் சிகப்பில் நோஉதம்

உள்ளே மேலாடுகின்ற வியாதி யெல்லாம்

ஒழியுமடா சிகப்பில் வரும் வியாதி பாரே.

சிகப்பில் சன்னிக்குத் தயிலம்

297. பாரப்பா சன்னி வகை பிறந்திட்டாலும்

பாலகர்க்குக்கொரு தயிலம் பண்பாய் செகு

நேரப்பா முருங்கையுட மலர்கள் ஈவ

நிசமான வெள்ளுடும் வசம்புங் கூட்டி

[illegible]

[illegible]

சீரப்பா நின்ப என்னைப் தனிலே போட்டு

சிவக்கப் பொரிந்திடும் பத்தில் வடித்தப் பூச

வாரப்பா சிகப்பதிலே சன்னியொன்றும்

வாராத காசிடை கொள் உன்னுக்கென்றே.

சிகப்பு நீர் பருவனுக்கு பூச்சு.

298. என்றெனவே உரைத்த மொழி பிசகிடாது

எழுந்த பல சிகப்புடனே வியாதி போக

நன்றெனவே சொல்லுகிறேன் பூச்சதொன்று

நலமான முருங்கைவித்தி காரை நாலும்

நின்றெனவே காருதனில் தின்னி வேரும்

நிசமான கருக்காரை வசம்பும் கூட்டி

அன்றெனவே காடி விட்டு அரைத்தன்று போல்

அப்பனே வழித்து/லைப் பூசும்போதே.

299. பூசிடவே வியாதியெல்லாம் பொசுங்கிப்போகும்

புதல்வருடபருவனது மாண்டு போகும்

வாசியாம் பிளைச்சொடு பிளைவைப்பூச்சி

வலிய அரையாப்புடனே வற்றிப்போகும்

ஆசியதாய் பறந்து விடும் சிகப்பு நாகன்

தொலைந்து விடும் குலையது அரனுர் சொன்னூர்

காசினியில் மதலைகள்க் கார் சொன்னேனிந்த

கைகண்ட இச்சு மருந்ததனைக் கேளே.

வேறு பூச்சு.

300. கேளேதான் திரிகடுகு வறட்டு மஞ்சள்

சீரகம் நன்றி களிப்பாக்கு சாம்பிராணி

தாளேதான் கருக்காரை முத்தக்காசு

தக்க குக்கில் கருக்காயும் வசம்பு பச்சை

சூளேதான் நிலப்பனை வேர் சமரம் கூட்டி

அறிந்த பொடி முட்டை வெண்கருவாலாட்டி

வாளேதான் துளி பரத்தி பற்றப் போட

வந்தெழுந்த பருப்பருவன் வற்றிப்போமே.

வேறு பூச்சு.

300. கேளேதான் திரிகடுகு வறட்டு மஞ்சள்

திப்பிலிக் கீரகம் நன்றி களிப்பாக்கு சாம்பிராணி

தாளேதான் கருக்காரை முத்தக்காசு

தக்க குக்கில் கடுக்காயும் செம்பு பச்சை
ஆளேதான் நிலப்பனைவேர் சமஞ்ச் கூட்டி
அரிந்து பொடி முட்டை வெள் கருவாலாட்டி
வாளேதான் தனிபரங்கி பற்றப் போட
வந்தெழுந்த பருப்பருவள் வற்றிப்போமே

வேறு பூச்சு

301. போமப்பா நல்மிளகு நஞ்சறுத்தான் வேரு
புகழான கருஞ்சூரை அமுக்கூர வேரும்
தாம்ப்பா வேகமொடு ஒரிலையின் மூலம்
தக்க வகை கதம்பை நீர் தன்னிலே ஆட்டி
நாமப்பா வெதுப்பி மதை அடக்கிப் பூசு
நலமாகும் பருவவெல்லாம் நயந்து வற்றும்
காமப்பா கருத்த ஊறந்த வீக்கம் வற்றும்
கை கண்ட வித்தை மிது கருத்தாம்ப்போரே.

வற்றவும் உடையவும் பூச்சு மருந்து.

302, பாரப்பா குமரியொடு சிவந்திருள்ளி
பயிலி மாதளை முசுட்டை பழம்பாசியோடு
நேரப்பா விடத்தை இலை புளியின் ஆரை
நேரான அடம்பு தளிர் வகையோடெல்லாம்
ஊரப்பா அரிந்து கனிநீர் தன்னில்
உண்மையுடன் தான வித்து அரைத்து மைந்தா
சேரப்பா வெண்ணெய்தக்கிடதான் கூட்டி
செயனித்து பூசிடவே சாந்தமாமே.

303. சாந்தமாம் பருப்பினவை வீக்கம் பொன்னி
தக்கதோர் சிகப்புக்கெட்டு நீர்க்கெட்டெல்லாம்
பாந்தமாம் உடனேவுடனே காந்தல் குத்தும்
பனி குளிர்கள் படர்ந்த சிகப்பதி வேக்ங்கள்
ஒய்ந்த நீர் வற்றிடவும் பழுத்துச் சீழும்
உடைந்து போம் உண்மையிது உமைதன்குருளே.
பாய்ந்த சீத் சலம் புரவு சாந்தமாம்
பாடுகிறேன் புரவெண்ணெய் பரிந்து கேளே.

புரவெண்ணெய்.

304. பரிந்து கேள் புங்கிடை பாழுக்கு
பகர் பல்லி பாலை இலைச்சாறுமுக்கு

நிரந்து பார் முடிதாரம் குருசு சுத்தம்
நிலையாக ஓர் சமனும் நிரப்பிக் கொண்டு
மருந்தெல்லாம் ஒன்றித்து குழம்பை நெய்யில்
மகத்தாகத்தானெரித்து மால் பத்தில்
சொரிந்து பார் புரவலர்க்கும் புண்கள் தீரும்
சொல்லுவேன் குளிகையது விரைந்து பாரே

சிவப்பா குளிகை.

பார்க்கையிலே பறந்திபுட ~~வெள்ளைக்குச~~ பட்டை குரை
பாங்கான தலைபூர் சேர் மூலமாகும்
தீர்க்கமுடன் ஒக்கில் காசர் சீரம் ரண்டும்
சிறப்பான சாதிலிங்கம் கந்தி தெய்ம்
ஆர்க்கையிலே ஒரு நிறையாம் மூலப்பாம் தன்னில்
குசுமுடன் தானரைந்து உருட்டிக்குன்றி
வார்க்கையிலே சீரகத்தின் கஷாயந்தானிட்ட
வாராது சிரப்பு அதுவே அபத்தியமும்.

306. அபத்தியத்துடனே சிரப்புத்தீரும்
அப்பதிசி ரத்த வகை காப்பன் தீரும்
சொறி பற்றை கிரந்தியொடு தடிப்பு தீரும்
குஷ்டமதாம் பறங்கி வகை கரிந்து போகும்
அறிந்துடனே வகுப்பறிந்து கஷாயத்தாட்டே
தீ அடங்காத ரணங்களெல்லா மாறிப்போகும்
தெரிந்து விடும் அரையாப்பு சூலைக்கெட்டு
செகதலத்தோர் அறிய இன்னம் கூறக்கேளே.

கெருடாதிக் குளிகை.

307. கறக்கேள் கெருடமுட நாபிவேரும்
ஜுமான மிளகு கருக்குரைப்பட்டை
அறக்கேள் கருஞ்சீரம் சிவப்பாவும்
உண்மையுடன் தானிடித்து வடியே செய்து
தெறக்கேள் நிமல் நீட்டான் குளிச்சாற்றில்
சேர வரை சாமமது அரைத்து செக்கல்
பாரமுடன் குன்றி போல் உருட்டிக் கொண்டு
பகலவன் தான் காணுதே நிழலில் வையே
வைத்துடன் கொத்தமல்லி சீரம் ரோஜா
வகைகவாக முருங்கிறிக நிலவாகை தாமும்

308. சித்தமுடன் கஉஷாயமிட்டு குளிகையொன்று

சேர்த்துரைத்து மூன்று நாள் ஊட்டும்போது

பற்றறவே சிகப்பென்ற வகைகளெல்லாம்

பரிசு கெட்டு பாரு விட்டு ஓடிப்போகும்

புத்தியுடன் மசைலங்கள் கழிந்து போகும்

புனிதமெனர் புன்னியனே சன்னி வகை தீர்க்கக் கேளே.

309. கேளப்பா இஞ்சி நீ உள்ளி புழிந்த நீரில்

கேடில்லா குளிகையொன்று கொடுக்க தீரும்

ஆளப்பா திற்பிலி நற்சீரமிட்டு

அழகான வெந்தயமும் அரத்தை மூலம்

பாளுப்பா கஉஷாயமிட்டு அருந்தும் போது

பாலகனே கப சுரங்கள் பறந்து போகும்

காளப்பா கை கண்ட குளிகை யொன்று

காசினியில் சொல்லிவிட்டேன் கருத்தாய்தானே.

தங்கவராதி.

310. தாளுவ தங்கிகமொடு முதது வெள்ளி

தருவான ருத்திரசம் கலையின் கொம்பு

மானே கேள் காண்டாமிருகம் பவழத்தோடு

மகத்தான கற்பூரம் ரோசனை கஸ்தூரி

ஊறுள புனுகு கருஞூரை நெத்த

உற்ற சந்தம் பேதியொடு மஜரம் பூலா

வாளுள ஏலமொடு கடுகு ரோஜி

வகையான அக்கிரு அரத்தை பல்லி

(பல்லி – திற்பிலி)

311. பல்லியொரு அரிதகியும் பீர ரோஜி

பாலகனே உலுவாயும் வெள்ளைப்பூடு

துல்லியமாய் நிறைவகைக்கு சரியாய் வாங்கி

தனிலே

சுகூடமுடன் இஞ்சிச்சாறு தின்னிர் ஆட்டி

வல்லியே பயறளவு உருண்டை செய்து

வலுவான குழந்தை நோய் அறிந்து ஊட்ட

தல்லியரே சீரகத்தில் கொள்ளும் போது

நீ சருவ சுரம் கபமுடனே சிகப்புப் போமே.

312. போமப்பா காசவகை சிகப்பில் தோஷம்
பொல்லாத சன்னியதும் ஊசிரோகம்
தாமப்பா இஞ்சியது புழிந்த நீரில்
சர்வ தீரை பிரளியதும் சிவிர்ந்து போகும்
ஏமப்பா சிகப்பு தொகை அதபத்திலும்
ஏகிவிடும் அக்கரமும் வாயில் புண்ணும்
நாமப்பா தங்க நகராதியிந்த
நலமான குளிகையிது உலகத்தோரே.

சிகப்புபடுவன் சன்னிக்கு குளிகை.

313. உலகத்தோர் பிழைப்பதற்கு குளிகை யொன்று
ஒரு பலம் வேர் கருஞ்சூரை இடித்துப் போட்டு
மல்யாமல் சாதிலிங்கம் சுத்தி செய்து
மைந்தனே ஒரு கழஞ்சு பொடித்து சேர்த்து
குலையாமல் முலைப்பாலால் ஆட்டி வாங்கு
குளிகை சிறு பயறளவு உருட்டிக் கொள்ள
பலயான சிறு சீரம் முலைப்பால் ஆட்டின்
பாலதிலே மைந்தருக்கு ஊட்டிடாயே.

314. ஊட்டிடவே சிகப்பெங்கே நீர்களெங்கே
உயர்ந்தெழுந்த பொன்னியொரு படுவனெங்கே
நீட்டி வரும் சிகப்பதிலே சன்னி தோஷம்
நெடுஞ்சுரங்கள் இறங்கலொடு ஏற்றம் தோடை.
காட்டிய தோர் செம்புள்ளி கஷாயமிட்டு
களைத்த உடல் வேதிடவே சுழன்று போகும்
பாட்டிலே சொன்னபடி முதிதன் தன்னை
பால்தனிலே அரைத்திடனே பூச்சபோமே.

குங்குமப்பூ குளிகை.

315. போவதற்கு குளிகையொன்று புகலக்கேளு
புகழான குங்குமப்பூ தேற்றான் கொட்டை
ஆவதற்கு அதிமதுரம் வெள்ளவுள்ளி
அப்பனே காயமொடு கடுகுரோகணி.
ஏவதற்கு திற்பிலியும் கடுக்காய் தோடும்
இந்துப்பு அரத்தையொடு சிறு தேக்கென்னும்
நோவதற்கு கருஞ்சூரை ரெத்த சந்தனம்
நொய்ய சிறு பேதியொடு பூத்தானே.

316. தாஞன இமிர்த வள்ளி சாகத்தாலே
தானரைப்பாய் ஒரு சாமம் தோடைச்சாற்ருல்
மாஞன ஏலமொன்ற ? கஉஷாயத்தாலே
மகிமையுடன் தானரைப்பாய் குறத்தி முலை
ஊஞன சாமமொவ்று கழிந்தால் பின்னே
உழுந்தளவு உன்டை செய்து நிழலிலுலர்த்தி
தேஞன சிறு வருக்கு முலைப்பாலோடே
சேர்த்துமே அருந்திடு சிகப்பு போமே.

317. போமப்பா சிகப்பு தகை அறுபத்திஞலும்
புடைத்தெழுந்த கரப்பன் வகை 55-ம்
தாமப்பா அக்கரமும் பனி சுரங்கள் சன்னி
சாந்தமாம் கபதோஉஷம் வாய்ப்புப்பெல்லாமி
நாமப்பா தீரையது சிகப்பில் தொந்தம்
நாசமாம் பிரளியதும அனுபானத்தில்
அறைந்து விட்டேன் கை கண்ட சூக்ஷுந்தானே,
ஆமப்பா குங்குமப்பூ குளிகை தன்னே

திரிகடுகு குளிகை.

318. சூக்ஷமென்ருல் இவ்வொரு குளிகை கேளு
தரிசமுடன் திரிகடுகு ஏலம் கொட்டம்
காச்சையுடன் அதிமதுரம் கூரைப்பட்டை
கடியதொரு குங்குமப்பூ சந்தம் ரண்டும்
பாச்சலுடன் இடித்துப் பொடிவடியே செய்து
பாங்கான கொடிக்கள்ளி பழச்சாற்ருலே
மீச்சையுடன் தானரைத்து உன்டை செய்து
வெள்ளை முலைப்பாலதிலே ஊட்டுவாயே.

319. ஊட்டுவாய் சிகப்புதகை அறுபத்திஞலும்
உன்டால் தணப்புடனே திரை போகும்
நாட்டிடவே கிரந்தி வகை தவர்ந்து போகும்
நடுக்கமுற்ற சன்னியதும் பிரளி தீரும்
நீட்டிடவே சிகப்பில் வரும் பனி சுரங்கள்
நில்லாது திரிகடுகு குளிகை தன்ஞல்
சூட்டிடவே நோய்களெல்லாம் பறந்து போகும்
தொடந்த மலம் சுழிசசலுக்கு குளிகை கேளே.

மலக்கட்டுக்கும் வீக்கத்துக்கும் சந்தனாதிக் குளிகை.

320. கேளப்பா சந்தனமோ பலந்தானென்று

கேடில்லா வாளமரைப்பலமே வாங்கி

(சந்தனம் பலம் 1, வாளம் பலம் அரை)

நாளப்பா முலைப்பால் விட்டரைத்துக் கொண்டு

நால் சாமம் கழிந்ததின் பின் பயறு போலெ

பாளப்பா போகாமல் உருட்டிக் கொண்டு

பகலவன்தான் காணமல் மறைவில் வைத்து

வெகு வேளப்பா உலர்ந்த பின்பு பதனம் பண்ணி

வெகு நோய்க்குக் கொடுத்திடவே தீரும் பாரே.

321. பாரப்பா முலைப்பாலில் அருந்தும் போது

பாலகர் தன் மலக்கட்டு கழிந்து போகும்

ஊரப்பா பிரளி வகை தீரை கோபம்

உடல்தனிலே எழுந்த விஷ பாகம் போகும்

அரப்பா குளிர் சுரங்கள் மாறிப்போம்

தடர்ந்த சுரக்குளிகை யிதுக்கொவ்விடாது

சூரப்பா மைந்தருக்கு சுரங்கள் தீர

சூக்ஷ மதாங் குளிகையொன்று தொடர்ந்து கேளே

சிகப்பில் சுரத்துக்கு சாதிலிங்கக் குளிகை.

321. கேளப்பா சாதிலிங்கம் சுத்தி செய்து

கெறுவான திற்பிலித் தூள் நாலிரட்டி

ஆளப்பா முலைப்பால் விட்டரை நால் சாமம்

அதின் பிறகு இஞ்சிச்சாறு அதிலே ஆட்டி

நாளப்பா பயறளவு உண்டை செய்து

நான் முகனைப்பணிந்து நாட்டுள்ளோர்க்கு

சுளப்பா அரத்தை திற்பிலி மூலங்கூட்டி

குடி நீரில் கொடுத்திடவே சுரங்கள் போமே.

322. போகுமே சிகப்பில் வரும் சன்னிதானும்

பொல்லாத வலியுடனே குடோரம் மாறும்

பாகமே பாலகரே வருத்தஞ் செய்யும்

பரிவான சுரமுடனே பிரதோஷம்

ஏகுமே சுரத்தில் வரும் தோஷம் சீதம்

எய்யாத எழுகடலுக்கப்பால் போகும்

ஆகுமே இன்றுமொரு குளிகை தானும்

அறிந்திட்டபடி சந்தனாதி யென்னே.

323. போகுமே சிகப்பில் வரும் சன்னிதாசும்
        பொல்லாத வலியுடனே குடோரம் மாறும்
பாகமே பாலகரே வருத்தஞ் செய்யும்
        பரிவான சுரமுடனே பிரதோஉஷம
ஏகுமே சுரத்தில் வரும் தோஉஷம சீதம்
        எய்யாது எழுகடலுக்கப்பால் போகும்
ஆகுமே இன்னுமொரு குளிகைதானும்
        அறிந்திட்டபடி சந்தனாதியென்னே.

சிகப்புக்கு சந்தனாதி குளிகை.

324. சந்தனம் அரிசியாறு
        சார்ந்த சீரம் மூன்று தாசம்
அந்த வால் மிளகு ரண்டும்
        அதிகமாம் மதுரம் மூலம்
முந்திய வசம்பு பாலை
        மூன்ற முக்கூரம் சூரை
எந்திய ரெத்த சந்தம்
        எடுத்தரை சாஸ்திர பேதி.

325. சாஸ்திரப் பேதி பூலா தீ
        தனித்த நல் சீனப்பாவும்
கோத்திமாயிடித்து
        கொடிய நல்வடியே செய்து
பொத்திரமாகப் பத்து
        புஉஷ்பத்தின் சாறு வாங்கு
நேத்திரமா யரைத்து
        நிகழ்த்து வேள் உழுந்து மட்டும்

326. மட்டமாய் உருட்டிக் கொண்டு மங்கைபால் தனிலே கொள்ள
உட்டனம் முப்பத்தாறும் உறுசிகப்பறுபத்திறாும்
வட்டமாங் கரப்பனோடு வருந்திய சுரங்கள் தீரும
திட்டமாம் சந்தனாதி தீர்ந்திடும் கிரந்தி தானே.

சிறு சந்தனாதி குளிகை.

327. தானமாம் இன்னுமொரு குளிகை சொல்வேன்
        தயவான சந்தமது ரண்டும் பூலா
ஏனமாமதுரமொடு பட்டை சூரை
        இதமான தெற்றிப்பூ கமலத் தல்லி

பானமாம் திற்பிலியும் அரத்தை நன்றி
பாங்கான குங்குமப்பூ மிரிசாம் பேதி
கோனமாங் கொட்டமொடு குறத்திச் சாற்றில்
குணமான செம்பருத்தி பூச்சாற்ருட்டே

327. ஆட்டியே இருசாமம் அரைத்துருட்டி
அடவாக நிழலுலர்த்தி பாலர்க்கூட்ட
நாட்டிலே சிசுப்பு தொகை அரபத்திலும்
நால் காதம் ஒருமடா கரப்பனூரல்
கூட்டிலே சூலையொடு கிரந்தி தாலும்
குடிபோகும் சிகப்பிலெழும் சுரங்களெல்லாம்
காட்டிலே பறந்திடுமே உதட்டில் பூம்பு
கை கண்ட சந்தனுதியிது தப்பாதே.

பூபதி மாத்திரை.

328. தப்பாது பூபதி மாத்திரைதான் சொல்வேன்
சாதிலிங்கம் பூங்காவி ர்ச கற்பூரம்
ஒப்பாத ஏலமுடன் ஜூரை நன்றி
ஒன்றப்பாதிற்பிலியும் சாத்திர பேதி
வப்பில்லா ரெத்த சந்தம் பூதா விருக்ஷம
~~உற்பன~~ வகையான மதுரமொடு அரத்தை யக்கிரு
உற்பனமாம் கோதம் பூ கஞ்சி வார்த்து
உண்மையுடன் தான்ரைத்து உருட்டு வாயே.

329. உருட்டி வைத்து குளிகை தனை முலைப்பாலில்
உறவான சீரக நீர்தனிலே கொள்ள
மருட்டுகின்ற சன்னியொடு சுரங்கள் சேற்பம்
மகத்தான சிகப்பிளொடு கரப்பன் சூலை
திரட்டுகின்ற இருமலொடு சுழியன் இளைழ
திட்டான பொருமலொடு மாந்தக் கெட்டு
அருட்டான உள்வியாதி புறவியாதி
அகலாத நோய்களெல்லாம் அகன்று போமே.

தங்கவராதி குளிகை.

330. போகுதற்கு இன்னுமொரு குளிகை கேளு
புலத்தியனே தங்கமொடு பவழமுத்து
வேகமுள்ள புழுகு ரோசனையும் வல்லி

வெருண்ட தாமரையல்லி ஓரிலையும் நங்கை
பாகமுடன் குங்குமப்பூ நன்றி சூரை
பகர்ந்த கலங்கொம்பு காண்டாமிருகக் கொம்பு
ஓகோகோ என்ன சொல்வேன் மறரம் அக்கிரு
உகந்த சந்தம் பூலாவும் சாத்திர பேதி

331. பேதியுடன் கொடி வேரும தெற்றி மூலம்
பெருவாகை செம்பருத்தி வேருங் கூட்டி
ஆதியென்ற அமுக்கூரம் ஜாதியும் *ஏலம்
அடவான காயமிந்து நிலவேர் முட்டை
வேதியென்ற சாதிலிங்கம் கற்பூரம் பச்சை
வெண்மையுள்ள பூங்காவி சீனப்பாவும்
வீதியுடன் மருந்து வகை கூட்டிக் கொண்டு
விளம்புவேன் முலைப்பாலில் சாமம் ஒன்றே

332. ஒன்றே கேள் இஞ்சிச்சாறு தெற்றிப்பூவின்
உகந்த செம்பருத்தி மலர் பன்னீர் தன்னில்
நன்றான கழுதையுட பிரலிலாட்டி
நலமான குளிகை குன்றியளவுருட்டி
பன்றான இஞ்சிச்சாறு முலைப்பால் தன்னில்
பற்றுகின்ற சிகப்பு தொங்க அறுபத்தினும்
மன்றான சுரம் சன்னி கரப்பனொடு
மகத்தான கிரந்தி முதல் பறக்கும் நீர் ப்பாரே.

333. பாரப்பா பூவரசம் பட்டை காயும்
பாங்கான செம்பருத்தி இலையும் தெற்றி
நேரப்பா மலருடனே அவரி பத்திரம்
நேசமுள்ள ஈருள்ளி கழுதை லொத்தி
ஊரிலுள்ள குப்பியிலைச்சாறும் கூட்டி
உண்மையுடன் . . . .

இடித்த நீர் பாலில் கூட்டி
336. ஊறான சிறு சீரம் ரெத்த சந்தம்
உற்ற கருஞ்சூரையொடு ≠ பூலா பேதி
வேறான குக்கிலொடு சீனப்பாவும்
வெண்கழுதைமல நீரில் அரைத்த சேர்த்து
தூறான மழுகு பதம் தனிலரித்து

அருந்திருவில் சிகப்பதெல்லாம் அகன்ற போமே.

337. அகன்றுபோம் கரப்பனொடு கிரந்தி சூலை
அரியதோடு குரல் கம்மல் பவுந்திரங்கள்
திகன்று போம் ஊரலொடு சொறி சிரங்கு
திணப்புடனே அரையாப்பும் தெறித்தே போகும்
தகன்றுபோம் தோலுரிவு பறங்கி பொன்னி
தயங்கியே நில்லாது பொக்கன்தானும்
உகன்று போம் மதலையுடல் தங்கமாகும்
உறுதியாம் முன்லேய்கள் ஒழிந்து போமே.

சிகப்பு எல்லாத்துக்கும் சிறு பீளை தயிலம்.

338. போருமே சிகப்புக் கோர் தயிலஞ் சொல்வேன்
போக்கான சிறு பீளை பிடிதான் வாங்கி
ஆகுமே அரைத்துருட்டி தேங்காய் பாலில்
அடவாகத்தான் கலக்கு மெழுகில் வார்த்து
தாகுமே ஆறுதினம் ஊட்டும் போது
சுட ரொளிபோல் எழுந்த சிகப்பறுபத்தி நான்கும்
வேகமுடன் வாய் பூப்பு அக்கரங்கள்
வெருண்டோடிப் போகுமென்று உரைத்திடேனே.

சிகப்புக்கு நறுநன்றித்தயிலம்.

339. உரைத்திட்டேன் நறுநன்றி பல்ந்தாளென்று
உன்மையுடன் மேல் ~~தேசலைமும்~~ தோலைத்தள்ளிப்போட்டு
கரைத்திட்ட உள் நரம்பும் களைந்து வாங்கி
கடிய சிவந்துள்ளி பலம் அரையுங் கூட்டி
நீரை த்திட்டக்கருஞ்சூரை கழஞ்ச தாறு
நிச்சயமாய் நீயரைத்து தேங்காய் பாலில்
பரைத்திரமாக இதைக்கலக்கிக் கொண்டு
பாங்கான மெழுகுறைத்து பருவம் வாங்கே

340. வாங்கி நீ தயிலமிது உள்ளே கொண்டு
வழுவாக உடம்பு தலை பூசு பூசு
நீங்கிடுமே சிகப்பு தொகை 64-ம்
நிலையான அக்கரங்கள் நிமிஷம் போகும்
தாங்கி நின்ற வாய்ப்புண்ணு செங்கிரந்தி
தொடர் கரப்பனுவதுமே சூக்ஷந்தீரும்.
ஓங்கியதோர் செங்கரப்பன் அடர்ந்து போமே

ஒருவருக்கும் சொல்லாதே உலகத்தோரே.

வாத சிகப்பு எல்லாத்துக்கும் நெய்.

341. உலகத்தோர் பிழைப்பதற்கு நெய்யுமொன்று
உண்மையுடன் செந்நெரிஞ்சி துள சீருள்ளி
மலையாமல் செம்பருத்திப் பூவினோடும்
மைந்தனே இடித்துச் சாறு பிழிந்து கொண்டு
குலையாமல் பசுவின் நெய் உரியுங் கூட்டி
குணமான சீரகமும் ரண்டும் சேர்த்து
அலையாமல் அரைத்தெரித்து மெழுகில் வார்த்து
அருந்திடவே பாலருட சிகப்பு பேர்மே.

342. போகுமே குறத்தியென்ற மூலிதன் லை
புண்ணியனே இடித்துச்சாறுழக்கு வாங்கி
ஆகுமே சீரகமும் ரண்டு உள்ளி
அடவாகத்தானரைத்துக் கொண்டு
நா குமே பசுவின் நெய் உழக்கு விட்டு
நூஷமதாய் மெழுகு பதம் வடித்து வாங்கி
கூகின தோர் பாலகர்க்கருந்தும் போது
குணமாகும் வாதத்தில் சிகப்பெல்லாமே.

343. சிகப்பெல்லாம் தீர்ந்து விடும் தணப்பு ஊரல்
திறமான குத்தில் புண் குரலு கம்மல்.
வகுப்பெல்லாம் தோலுரிவு ரணங்கள் காந்தல்
வாலேபுட இருமல் இரு மலமும் தெளிந்திறங்கும்
தொகுப்பெல்லாம் மெலிந்த உடல் பிரகாசிக்கும்
தொல்லுலகில் கும்பலுரை பிசகிடாது
பகைப்புள்ள முன்னோய்கள் பறந்து பேரீகும்
பாருலகில் நெய் வடித்துப் பருக வூட்டே.

எல்லா சிகப்புக்கும் கிருதம்

344. ஊட்டிடவே இன்னமொரு கிருதங் கேளு
உண்மையுடன் குமரிச்சாறு படியுழக்கு
காட்டினதோர் காராவின் நெய்யுழக்கில்
கடிய சிவந்துள்ளி நங்கை அரைத்துப் போட்டு
நீட்டினதோர் மெழுகதில் வடித்து மைந்தா
நிச்சயமாய் காசளவங்கருந்தும் போது
சூட்டினதோர் சிகப்பு தொகை எல்லாம் போகும்
சுடரொளியுள் பொருளான கைந்தல்வாக்கே.

345. வாக்காகும் சொறி சிரங்கு குத்தில் புண்ணு
வகையான தோலுரிவு அரையில் புண்ணு
போக்கான தளைப்புடனே பொறிகளுரல்
பொல்லாத கை மூலத்தழுகல் தானும்
சீக்கான கழுத்தடியில் புண்ணுந் தீரும்
சிறுவருக்கு இன்னும் வகையொன்று கேளு
பார்க்கவே பலபிணிக்கும் மருந்ததாக
பாடிடுவேன் பவுசு பெற பாலகர்க்கே.

சிகப்பெல்லாத்துக்கும் கேசரி நெய்.

பாலகர்க்கு வர்த சிகப்பெல்லாந் தீர
பாங்கான கேசரி நெய் சொல்லக் கேளு
சீலமுடன் முருககிலையும் திரிப்பன் செம்பொன்
நீ சிறு நெரிஞ்சி கொற்றுனும் சிறியா நங்கை
ஞாலமுடன் தகரை முத்தம் மேனி சங்கு
நல்லதொரு இசங்கிலையும் பருத்தி தானும்
கோலமாகிலைதான்றி பழச்சாறோடு
கொடியவல்லிகழ்ச்சியிலை முசுக்கை சேரே.

347. சேரே சாரணையிலையும் ஈரவுள்ளி
செம்பருத்தி இலை பூவும் தெற்றிப்பூவும்
ஆரே நீ காரை நீரும் ஆவின் பாலும்
அதினிடை சேர் பூவரசன்பட்டைச்சாறும்
கோரே சேர் சிறு பிள்ளை சதாவேலிச்சாறு
கொடிய குறமூலியொடு நீலிச்சாறும்
வாரே நீ வகைக்குச் சாறு உழக்கு வாங்கி
வண்மையுடன் கழுதைப்பாலில் நாழி கூட்டே.

348. கூட்டு நீ பசுவின் நெய் மூன்றுழக்கு
கூசாமல் தேங்காய்ப்பால் ஒருழக்கு
நாட்டே நீ விளக்கெண்ணெய் உழக்கு சேரு
நலமான கடை மருந்தை நாட்டுவேன் கேள்
பாட்டிலே சொன்னபடி மதுரஞ் சீரம்
பால் கெருடப்பச்சையொடு கார்கோல்
வேட்டிலே யடங்காத கரிசீர்ம்
விழாலரிசி கிராம்பு கொட்டம் சாதிக்காயே.

349. சாதிக்காயிலவங்கம் கஸ்தூரி மஞ்சள்

சார்ந்த முக்கடுகிரேடு வசம்பு மல்லி
பாதியெனும் அரிதகியும் சிவதை மோதம்
பண்புடைய சீனப்பா வெள்ளவுள்ளி
ஒந்து சித்தரத்தை யொடு வேம்பாடம் பட்டை
ஓர் கழஞ்சு சாதிலிங்கம் கெந்தம் கூட்டி
மாதுமையாள் சொன்னபடி அருசு பாதி
மகிழ்ந்த சந்தனமும் கருத்த குரை

350. குரையொடு பூலாவும் பேதிதானும்
சுரபி ரோசனையோடு இடை நேர் கூட்டி
வாரியெனும் முன் சாற்றரத்துக் கொண்டு
வகையுடனே நெய் சாறூடிளக்கிக் கிண்டி
வீரியெனும் தீபம் போலெரித்து மைந்தா
விந்தையெறும் நாதனை உள் அடக்கிக் கொண்டு
காரியெனும் மெழுகு பதம் தீ கண்டிறக்கி
காசளவு கொடுக்க இரு மூன்று நேரம்.

351. இருமூன்று நேரமதில் சிகப்பங் கேது
ஈன்றதொரு குழவிகளுக்கு கரப்பனேது
வருமந்த கிரந்தியெங்கே சூலையெங்கே
வாராது படுவடு நீர்கள் பொன்னி
மருவிய தோர் விசெசிப்பின்கு வாய்ப்புண்ணும் காதில் பாய்ச்சல்
மைந்தருட மேகமுதல் இசிவு மூலப்புண்ணும்
கருவான நோய்களெல்லாம் தகர்ந்து போகும்
கை கண்ட கேசரி நெய் கருத்துள்ளோரே.

சிகப்புக்கு சிறியா நங்கை நெய்.

352. கருத்துடனே நெய்யிலொன்று இன்னுங் கேளு
கானில் வளர் நங்கை மாங்காயளவரைத்து
பெருத்த உள்ளி சாறுழக்கு நெய்யுழக்கு
பேணியொன்றாய் கலந்து கிண்டி மெழுகில் வார்த்து
சிறுத்த மைந்தர்க் காசிடைதான் அருந்தும் போது
தெறித்துப் போம் சிகப்பதென்ற நோய்களெல்லாம்
அறுத்திருந்த கரப்பனொடு கிரந்தி தீரும்
ஆயுள் மறை தப்பாது அறிவுள்ளோரே.

செம்பருத்திநெய்.

353. அறிவுள்ளோர்க்கின்னுமொரு நெய்தான் கேளு
அடவான செம்பருத்தி துளசி தெற்றி
பிறிவான முக்கூற்றி குறத்தி கீழ்காய்
பிலமான சீதேவி அவரி வல்லி
வெறியான பூங்குறத்தி செறிய பீளை
விளாம்புவேன் ஈருள்ளி கழுதைலொத்தி
குறியான கோவின் நெய் ஏரண்டெண்ணெய்
குரும்பைப்பால் இரு சீரம் கரைத்துக் காய்ச்சே.

354. காய்ச்சியே வடித்ததனைக் கொள்ளும் போது
[illegible] காணுஞ சிகப்பு வகை உதிரரோகம்
வேச்சுதே விடூ பாகம் விசற்பமென்ற
வெகு சுறுக்காம் கிரந்தியொடு செவ்வாற்பென்ன
வீச்சான கெற்பத்தில் எழுந்து மோதும்
வீமனென்னும் சிகப்பு தொகை வெளுண்டே ஓடும்
நாச்சென்ற உபதேசம் வெளிவிடாதே
நாதர்க்கள் தனை வணங்கி மருந்து செய்யே.

பால சிகிற்சை.

பல திரட்டு.

கபத்துக்கு - தாளக பற்பம்.

கட்டிப்போம் தாளகந்தான் கட்டி வாங்கி
கனமாக ஒரு கலசத்துள்ளே விட்டு
பட்டறவே சாரணையின் இலைச்சாறு முங்க
பாங்காக உளம் விட்டங் கடைத்து மூடி
திட்டமுடன் சிறு தீயாய் எரித்து மைந்தா
சிறப்பாக உருகையிலே கட்டிப்போகும்
வட்டமுடன் பற்பமது வெளுத்துப் போகும்
வருங்கபங்கள் சிலேற்பனங்கள் போகுந்தானே.

வாலைகள் சுரங்களுக்கு கஷாயம்.

போமப்பா தூதுவளை சிறு காஞ்சோற்றி
புகழ் சீந்தில் தன்டுடனே பற்படாகம்
நாமப்பா திற்பிலியின் மூலந்தானும்
நலமான சித்தரத்தை கடுக்காய் தோடு

ஞாமப்பா வளைக்கு ஒரு கழஞ்சு வாங்கி

சதைத்துடனே இரு நாழி தன்னிலிட்டு

ஆமப்பா குறுக்கியதில் திற்பிலி தூள்

அடவாக இட்டருந்த சுரங்கள் போமே.

வாலை வாதத்துக்கு தயிலம்.

வாலையுட வாதங்களெல்லாந் தீர

வாழ்த்து (வழுத்து) கிறேன் தயிலமென்று - வளமையாக

சீலமுடன் பழந்தேங்காய் ஆறு வாங்கி

திடமாகப் புழிந்துடனே நாழுழியாக

கோலமுடன் நின்பத்தின் குருந்து மூன்று

பிடியாகத்தானெடுத்து இடித்துக் கொண்டு

வேலவனே சரணமென்று கடுகு ரண்டு

பலமது வேம்பிட சாற்றுலாட்டி

ஆட்டிடவே குரும்பையின் பால் அளந்து விட்டு

அதிறடனே கிண்டியதை அவலை ஊட்டிக்

நீட்டிடவே குருவையுன்னி முதிர் பத்தில்

நினைவாகத்தான் வடித்துள்க் கூட்டு

காட்டிடவே பத்தியந்தான் கடினமாகும்

கைகண்ட வித்தையிது கருத்தாய் பாரு

பூட்டிடவே மேனியதும் பூசும் போது

புதுமையென்ன பாலருட வாதமெல்லாம் பறக்கும் பாரே.

வாலை வாதராக்ஷதன் குளிகை.

அவனிதனில் வாத ராக்ஷதன் அன்பான

அழகு சிறு குளிகையரைக்கக் கேளு

கவனமுடன் நறு நன்றி வசம்பு முத்தம்

கடிய வெண்காரமொடு காயங் கூட்டு

திவனமெனும் மிளகு சுக்கு திற்ப்லி மூலம்

சிறுக அயமோதகமும் வால் மிளகு

நவனமுறு சன்னியுகம் தேவதாரம்

நன்றாக அக்கிரு வெண்பிசினுங் கூட்டே

கூட்டே சிறு தேக்குமல்லி சீரம்

குணமான வாய் விளங்கம் கருஞ்சீரம் குப்பை

நீட்டு நீ வெப்பாலரிசி பாம்புக் கண்டம்

நல்ல கருநாவியொடு வடமுஞ் சேர்த்து

மூட்டே நீ நாங்குருவும் முசிறு முட்டை
முறையான கோழி வெண் காரஞ் சேரே
காட்டே நீ எருக்கிலையின் பழுப்பும் பூவும்
சார்வான முருக்கிலையும் முங்கைத்தேலே.

முருங்கைத் தோல் ருத்திர மணி யானைப்பல்லு
முறையால கழச்சித்தோல் கொழிஞ்சி மூலம்
கருக்கு வாயிலையிளுடு முள்ளன் கோளும்
களத்த புலித்தோலுடனே கம்பிளியுங் கூட்டி
நெருக்கமாய் மயிலிறகு சமறுவியாக்க
நேராக சோதனை கொண்ட வாக்கச் சொல்வேன்
பருத்ததோர் தோடை குப்பை மேனி இஞ்சி
பாங்கான நொச்சி தைவளையாமே.

ஆமெனவே படர் பருத்தி முஉலப்பால் இஞ்டு
அடவான இசங்கு தூதளை அப்பட்டு
போமே கேள் இவை யொக்க முவைத்து நாளால்
பூதமை பெற அரைத்துருட்டி பயறு மட்டாய்
நாமே கேள் நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
நலமான அனுபானம் அறிந்தங் கூட்டில்
வாமே கேள் பாலருட கிகம சகல நோயும்
பொல்லாத வலி குரப்பு சன்னி போமே.

சன்னியொடு புறவீச்சு சுரங்கள் மாந்தம்
சார்வான தோஉஷ முதல் சகல நோய்க்கும்
வன்னியெனும் குடோரி யென்ற வாதாரகூதன்
வலுவான குளிகையிற வளமையாக
சன்னியெனும் சுரமென்குல்
கடிதான அரத்தை குடி நீரிலாட்டு
கன்னியெனும் உள்ளி முஉலப்பாலிஞ்சி
குணமாகப் புழிந்த நீர் தன்னிலாட்டே.

நீட்டியே சுக்கு நீரில்
நீங்கிடும் பொருமல் வாய்வு
வாட்டியே நெரிஞ்சி தேம்பூர்
வளிகளும் கட்டிக் கொள்ளே

கொள்ள வேசிறு நீர் போகும்
        கொடியால் தரிப்பு மாறும்
தள்ளும் முக்கடுகு தன்னில்
        சாந்தமாம் சுபதோஷங்கள்
மள்ளிய உளுவாயுள்ளி
        வைத்திடு பிரளி போகும்
அள்ளிய ஓமம் சீரம்
        அடவாறு வில் லை விளாத்தி

விளாத்திநெல்பொரியுங்கூட்டி வகையுடன் அருந்தும்போது
அளத்திய சர்த்தல் தாகம் அகன்றிடும் திண்ணமென்று
கனத்திடும் மலத்தை காட்டில் கடுகு ரோகவி சிவதை
தளத்திடக் கஷாயமிட்டு தாக்கிட மாறிப்போமே.

ஸ்ரீ சாதிலிங்கக் குளிகை.

கோறுறு சுரங்கள்க் கெல்லாம் கொடுத்திடயோர் குளிகைசொல்வேன்
மாறுறு லிங்கம் நாலு மதித்த திரிகடுகுகட்டு
சீறுறு அரத்தை ரண்டு திற்பிலி மூலம் ரண்டு
பாதுறு பொடித்து நீலி பகர்ந்த சாறு விட்டரைத்தே

அரைத்துடன் முலைப்பாலிஞ்சி அதிலொரு சரசம்செய்து
கரைத்துடன் கொடுப்பீராகில் காசினியில் சுரங்களோடு
நிரைத்திடும் பாலகர்க்கு நீங்கிடும் சுரங்கள் காச்சல்
பருத்ததோர் தோஷம் மாறும் பலபிணிகள் ற போமே.

சுரத்துக்கு பொரிகாரக் குளிகை.

அகன்றுபோம் சுரங்களுக்கு குளிகையொன்று
        அன்றகிறேன் பொரிகாரந் நாவிலிங்கம்
களருமிளகுடனோமம் சமனாய்க் கூட்டி
        தூளாக்கி முலைப்பாலில் இஞ்சிச்சாற்றில்
மன்று குருவருளால் அரைத்துருட்டி
        பயறளவு உண்டை செய்து நிழலிலுலர்த்தி
சுகன்றுற சுரமானத்துக்கு இஞ்சிச்சாற்றில்
        குணறிடவே அதிதினத்தில் சுரங்கள்கண்டு போமே.

கும்ப முனிதாமுரைத்த வாகடத்தில் கூறினதேனர் கண்டூஷ மார்க்கங்கேளு
இன்பமுடன்பொன் வெள்ளி ருத்திராக்ஷம் யானைப்பால் கலங்கொம்பு பன்றிதேற்றை
அன்புடைய காண்டாமிருகத்தின் கொம்பகேடு அழகுதிரு கிருஷ்ணகொம்பு அஞ்சனக்கல்
வன்னுபுடைய சித்தரத்தை வால் மிளகு வருவான கற்கடக சிங்கியக்கிரு

அக்கிரு சிறு தேக்கு மல்லி தேற்றுன்
அரிதகியும் மரிவிறகும் வடமுங் கூட்டி
பக்கமுடன் உள்ளி இஞ்சி முருங்கை பூவும்
பகர் கொழிஞ்சி நிலவேரும் முங்கைப்பட்டை
வேகமுடன் தும்பை மலர் சமஙய் கூட்டி
வெள்ளை முலைப்பாலதிலே புழிந்து கொண்டு
கண்டிடவே கன்குடம் உரைத்து ஊட்டில்
போகுமே சுரதோஷம சன்னிதானே.

சன்னியொடு புறவீச்சு வலிசுரப்பு
சார்வான சுளியுடன் கபநீர் கெட்டு
வ ன்மை பெருங் கஷாயங்கள் மாத்திரைகள்
வகையான புட்டவியல் குடிநீர் தன்னில்
முன்னுரைத்த கன்குடமுரைத்துக் கொள்ளில்
மேலான நோய்களெல்லாம் தவர்ந்து போகும்
சொன்ன தொரு வாகடத்தில் பிசகொன்றில்
செர்ணமலை கும்பமுரை நீ பகர்ந்ததாமே.

சுரத்துக்கு சந்தமுதி குளிகை.

சந்தனம் முத்தம் கொட்டம் தகரம் நெல்வி மதுராம் மிச்சம்
மிந்திரு வேலி தக்கோல் மிகழ் சீரம் ஏலம் பேதி
கொந்துரு தேற்றுன் கொட்டை கொடிய முக்கடுகிந்துப்பு
வந்தமு சாதி லூனும் வளர்ந்த ரோகணியுங் கூட்டே.

கூட்டிட அரத்தை அக்கிருவும்
குளமாம் வகைக்கு கிழங்கு நிறை
நீ நாட்டே இடித்து பொடி செய்து
நலமாம் இளநீர் தொடைமிலை
போட்டே சாமம் ரண்டரைத்து
புத்தரியின் கடலைக்காயளவு
தாட்டேயுருட்டி நிழலிலுலர்த்தி
தாயின் முலைப்பால் சீரகமே.

சீரகம் இஞ்சி நீரில் சிறந்த நல்குடிநீர் தன்னில்
பார்தனில் பாலகர்க்கு பார்ச்சிட சுரங்கள் போகும்
நேர் பிறமேகவெப்பு நேரிட்ட கபங்கள் முத்து
வாருற கணைகள் காச்சல் வரும்பல வியாதிபோமே.

போருமே நெரிஞ்சிதேற்றன்பொருந்திய கிழாயந்தன்னில்
ஆகுமே நீரிறங்கும் அரத்தையும் மதுரம் மல்லி
தாகுமே முள்நெரிஞ்சி சீரம் தானென்றாய்க் கூட்டி
வேகுமே கருக்கு வெள்ளம் வெந்த நீர் கிழாயத்தூட்டே.

ஊட்டிட தாக சுரம் உடல்போகும் வெறி சுரங்கள்
வாட்டிட சுரங்களெல்லாம் வகை கண்டு கிழாயத்தூட்டு
பாட்டினில் கும்பர்தானும் பாடிடும் சந்தநெறி
நாட்டினில் மதலைகள்க்கெல்லாம் நல்லதோர்க்குளிகை தானே.

கணைக்கு ஆவரை கஷாயம்.

ஆவரை உலுவாயிண்டு அதிதகி அரத்தை மூலம்
மேவிய துளசி வில்வம் மிகுந்த தோர் சுக்கு சிற்ற
மேதாவும் வல்லாரை முத்தம் சார்ந்த நல்சீரகம் கூட்டி
காவியம் கண்ணிருளே கஷாயமிட்டருந்துவாயே.
அருந்திடச்சீனி தேனும் அதிகரோசிணையும் ருத்திராக்ஷம்
மருந்திடக்கலந்து கொண்டு பாலகர்க்கு அறுநாள்கொள்ளில்
திருந்திய வெப்பு காச்சல் தீர்ந்திடும் வாலசந்திரன்
உருந்ததொரு கணைகளோடு உற்றதோர் சுரமும் போமே.

கணைக்கு வேறு கஷாயம்.

போருமே இன்னுமொரு கஷாயஞ் சொல்வேன்
புகழான ஆவரையும் விஷ்ணுகிராந்தி
ஆகுமே வகைக்கு ஒரு பிடியாய்க் கொண்டு
அதிலேயிடு சிறு சீரம் மிளகு இஞ்சி
வேகமுடன் இருநாழி சலத்திலிட்டு
வெற்றியுடனெட்டொன்றாய் குறுக்கிக் காய்ச்சி
பாகமுடன் பாலகர்க்கருந்தும்போது
பதினெட்டுக்கணை தீரும் பலநோய் போமே.

இண்டு சருவாங்கம்.

இண்டி சர்க்கு ஆதவளை இசைந்த கண்டங்கத்தரி
புத்தகம் என்.2 பார்க்க.

சீதமேல் வாதத்துக்குத் தயிலம்.

வாதமடக்கி நொச்சி வளர்தோடை கண்டக்காரி
சீதனா கணை இசங்கு சிறுமேனி வேளைதாளை
கோதற இஞ்சி இண்டு குறிஞ்சான் முசுங்கைப்பட்டை
வேதரு அப்பட்டிநெடு வேலியின பருத்தி நிம்பம்

வாதற நிம்பமே முருக்கெருக்கு நிசதமதாம் மாவிலங்கு வகைக்கு
தளம்பெற பிடியோரொன்று சதைக்கிடித்தெடு சாருள்ளி
களம்பெற நிறையில் பாதி விதைத்ததில் கடுகு நிம்பெண்ணெய்நாழி கூட்டி
நதைத்தபடி கலந்து விட்டுக் கொண்டு பின்னும் நாட்டுவேநப்பா நயம்பெற அறிந்து கேளே.

கேளே திரிகடுகு திரிசாதி கிளரும் மதரம் திறிப லையும்
ஆளே தேக்கு வால் மிளகு அதிகக் கிரிசாத்தாளதுவும்
நாளே லிங்கம் காரமுடன் நலமாம் பிலிகரும்புடமும்
தா ளே வெள் ளைக்குந்திரிக்கம் ரடமாம் கயறு சிங்கியுமே.

சிங்கி சாத்திர பேதியுடன் சிறுக வலம்புரி அக்கிறுவும்
அங்கும் நிலவேர் மூஞ்சீர் அவில் அடவாம் ரோகணி குழியா னை
பொங்கும் சாரம் அரத்தை கொட்டம் பொருந்தும் காயம் வாய்விளங்கம்
எங்கும் சோமஅப்புடனே எடு நீயுள்ளி இவை சேரே.

சேரே முசிறு அண்டமுடன் சிறு நாகத்தின் கண்டமதும்
பாரே வகைக்குக் கழஞ்சொன்று பண்பாய் பொடித்தங்கதில் காய்ச்சி
தா ரே இருபது ஒ சிற்றண்டம் தொகை சேர் தயிலமது கூட்டி
சேரே சாறும் எண்ணெயொடு கோழிக் குடலும் ரெத்தமுமே

ரெத்தமும் கலந்து கொண்டு இகமுடன் அளவுகூட்டி
பருத்தமாம் தயிலம் தன் னை பண்புடன் வடித்துக் கொள்ள
வருத்தமாஞ் சன்னி தோஷமும் வரும் பிறவிச்சு ஈ ளை
துரத்திடும் சுளியன் தொந்தம் சீதமும் தொ லைந்து போமே.

மூர்ச்சைக்கும், சுரத்துக்கும், சன்னிக்கும், தயிலம்.

ஒழிந்திடவே சன்னியொடு சுரங்கள் தீரு
உண்மையுடன் தயிலமொன்று புகலக் கேளு
கழிந்திடவே தோடை நொச்சி கண்டங்காரி
கடிய இண்டு தூதுவளை இசங்குமேனி
[illegible] வழிந்திடவே தைவளை பருத்தி தானும்
வன்முருங்கை முள் முருங்கை இஞ்சி தானும்
ஒழிந்திடவே எடுத்துச்சாறு உழக்கு வாங்கி
முதிய நல்பெண்ணெயது படிதான் சேரே.

சேரே நீ வெள்ளுள்ளிகாயம் சனிஙயகமும் சிறுபுழுகும் வசம்பும் கூட்டி

பாரே நீ அரைத்தெடுத்து கலக்கிக்கொண்டு பண்பான கரும்புடமும் மஞ்சளுப் பீலி

ஊரே நீ வடக்கயிற சமனுக் கூட்டி உற்றகரிகலந்ததில்பின்பாகம்கேளு

நேரே நீ சுந்தரியொடு அனிலும் தென்டில் நீ நிரம்பார்த்தக் கொத்தியதில்கூடத்தாக்கே.

தாக்கிடவே அண்டைமது மூன்ற பத்து
சரியாகத் தயிலமெடுத்ததிலே சேர்த்து
தூக்கிடவே பாகமதாய் கிண்டி காய்ச்சி
துள்ளிவரும் பாகமதில் கோழி ரெத்தம்
நீக்கிடவே குடலோடு கலந்து கிண்டி
நிமிஷத்தில் குடல் முறியும் பருவந்தன்னில்
வாக்கிடவே வடித்துடனே உள்ளுக் கூட்டி
வழவாகப் பூசிடவே சன்னி போச்சே.

போச்சப்பா சன்னியொடு வலிகள் சீதம்
பொல்லாத கபதரப்பு இளைப்பு மூர்ச்சை
ஆச்சப்பா குடோர முதல் வெட்டு வாதம்
அடவாகத் ீருமென்று அருளிச்செய்த
மூச்சப்பா மயங்கினநோர் மூர்ச்சைக் கெல்லாம்
முறையாகத் தயிலமதை அனத்திப் பூச
வாச்சப்பா தயிலம் முறையாய் செய்வாய்
வாகடிமோ பிசகாது வழி தப்பாதே.

முள்ளொலித் தயிலம்

போமென்ற பாலகர்க்குத் தயிலமொன்று
புகலுவேன் வதவளை குப்பை மேனி
தாமென்ற அப்பட்டு இசங்கு தோடைழ்
தனித்த இண்டு படர் பருத்தி கிலுகிலுப்பை
காமென்ற அவரியிலை குழியின் வீண்டான்
கனகண்டங் கத்திரியும் வல்லாரை வில்லை
நாமென்ற இருநொச்சி துளசி ரண்டும்
நலமான எருக்கு முருக்கிலையும், கூட்டே.

கூட்டே நீ கழச்சி கூந்தல் சாறும்
சூமான நாகவல்லி நிம்பத்தோலும்
நாட்டே நீ வகை வகுக்கு சாறழக்கு

நலமான சுந்தரிதெண்டிலனில் சிற்றண்டம்
காட்டே நீ நில வேரும் குழியில் யானை
கம்பிளியும் மயிலிறகும் வடமும் சேரே
ஆட்டே நீ பரிக்குழம்பு முசலின் காட்டம்
குஷ்டமதாம் பன்றி நகம் கலங்கொம்பு சேரே.

சேரே நீ பெருங்கறையான் நிலவேர் ரண்டும்
சேர்த்திடு நீ ஆழாக்கு சரியதாக
பாரே நீ [illegible] நிர்பெண்ணெய் நாழிகூட்டி
திண்மூ பய்ய சிறு கண்டமுமே சுரியோடொப்பம்
நாரே நீ அஷ்டமதைத் தயிலம் வாங்கி
நன்றாக ஒருழக்கு கலந்து மின்னும்
காரே நீத் கரும்பிடைத்தான் ஒன்றின் ரெத்தம்
கலந்ததில் குடல் நிறம் சேரநவிலுவோமே.

நவிலுவேன் அதிமதுரம் வசம்பு குக்கில்
நாயகம் நல்கடுகரத்தை திரிகடுகோருள்ளி
திகலுவேன் மரமஞ்சள் உலுவாய் திற்பிலி
திடலான சிவதை அக்கிருகர் கடக்கசிங்கி
பகலுவேன் பச்சவன் பழுக்காய்தானும்
பூமியிலே நஸ்டிகூட கொழுப்பு கூட்டி
உகலுவேன் முள்ளெலியைக் கருக்கிப் போட்டு
உற்றதொரு வால்மிளகு தேக்கு கொட்டம்.

கொட்டமொடு இலவங்கம் மருந்தோடொக்க
கொடியதொரு முருங்கையின் . சாற்றுலாட்டி
திட்டமுடன் என்னெயிலே கலந்து கொண்டு
திடமாகத் தீயெரித்து முறுக வாங்கி
மட்டான சிறு பாலகர்க்கு சகல நோய்க்கும்
துட்டபினி சிலேற்பனம் முதல் சுரதோஷங்கள்
அருளான தைலம் விரலதிலே தொட்டு
அழகான ப்ாலகர்க்கு நாவில் தீட்டு
மெருளான சிரசு பதைப்புடம்புகை கால்விசை தடவு
தீரும் நோய் விளம்பக்கேளு
தருளான குழித்தோஷம் திரைத்தோஷம்
நிழல் தோஷம் பறவைத் தோஷம்
முருளான பேர்த்தோஷம் பக்ஷித் தோஷம்
உற்றபுள்தோஷம். நல்மொழிந்தோம் போமே.

மூன்றுடனே சிரதோஷம் இருபத்தொன்றும்

முசல் வலிப்பு சன்னி பதிமூன்றுங் கூடி

தோன்றுகின்ற சிலேற்பனந்தான் இருபத்தொன்றும்

தூரப்பிருமல் விக்ஷி விஷச்சுழியன் தீரும்

குன்றுதலாம் கபக்கட்டு குலவலக்கட்டு

குந்திருமல் வெப்புடனே குளிர்ச்சை தீரும்

போனதொரு ஈரல்நோய் எல்லாம் தீரும்

புகழான முள்ளெலியின் தயிலந்தானே.

மேகசுரம் எல்லாத்துக்கும் கஷாயம்.

மேகசுரம் போவதற்கு கஷாயமொன்று

விதமான முந்திரி ராமிச்சு மல்லி

ஆகமாய் குறுந்தொட்டி அமிர்து சீரம்

அழகான பற்பாடாகம் வில்வே வேரும்

ஜகமுடன் இருவேலி விஷ்ணு கிராந்தி

உண்மையாய் சந்தனம் அரத்தை மூலம்

வேகமுள்ள அருகன் வேர் முத்தக் காசு

வேண்டு சிறு பயறு சுக்கு மதுரம் பேதி

பேதியுடனே சரிசமன் எட்டொன்றாக்கி

புதல் வருக்க் குந்திடவே தீரும் நோய் கேள்

வாதுடனே உஷ்ண சுரம் தாக சுரம்

வந்ததொரு மேகசுரம் அஸ்திச் சுடு

தாதுடனே சலக்கடுப்பு சாந்தமாகும்

தவறிவிடும் பித்த சுரம் தவர்ந்து போகும்

மாறுடனே உரைத்த மொழி பிசகிடாது

மலையாதோர் இச்சாதி கஷாயந்தானே.

கிரந்தி, கரப்பன், சிரங்கு பொரி

தேமல் இவைகளுக்குப் பொடி.

சுரசம் கிரந்தி தீர கூடிய முக்கிப் பலமொன்று வாசமது

தான் பலங்காலாம் வகையாய் திற்பிலி பலமொன்று பேதம்

சீனப்பாவொன்று பெருகும் சீரம் கருஞ்சீரம் ஓசையறவே

சிறு நாகம் உகந்த கிராம்பு அமுக்கரம் அமுக்கூரத்தோடிவை

சமனுய் ஆக நிறைசேர் பலங்காலாய் நடுக்கும் ச்வனூர் நல்

கடுக்காய் நாடும் பலமது இருகால்தான் தவர்க்க இடித்துப்

பொடியாக்கி தானே கொசுவின் தேனிலுண்ண திவர்க்கத்துடனே
காச கனை திரட்டும் சிரந்தி இரு நான்கும் நான்கும் சூலை
சொறி சிரங்கு நல்ல குட்டம் அரையாப்பு பங்கும் மூலபவுந்
திரமும் பகர்ந்த கரப்பர் எட்டெட்டும் ஒன்றும் ரெத்த தோஷ
முதல் ஓடும் சில்விஷம் பொரி தேமல் தா ங்கும் இளைப்பு
கனை முதல் துயரம் நீங்கும் ருசுபிதே.

நீரை தீர கஷாயம்.

நாகவேப்பின் தோல் கச்சோலம் நவிலும் தாரம் ஒரொன்று
கூவும் வகைக்கு கழஞ்சு ரண்டு குதிக்கப்புரசின்வித்தஞ்சும்
மேவும் கஷாயம் வைத்தருந்த விழுமேகிரடி இலைவெல்லாம்
தா வும் வெணக்கஞ்சி கொள்ள நலேயும் பேதி பிடித்திடுமே.

சிகப்பில் சன்னிக்குத் தயிலம்.

ஒழிந்து போம் நிர்பெள்ளெய் உழக்கு வாங்கி
உற்ற தடிகாயமொடு உள்ளி ஒந்து
கழிந்து போம் தும்பை மலர் ரண்டுங் கூட்டி
களக்கவே தாவரைத்துக் கரைத்துக் கொண்டு
வழிந்து போம் இன்டிலைச்சாறுழக்கு கூட்டி
சிகப்பு
வடித்தருந்த கிக்ப சன்னி வராதென்ன
ஒழிந்ததொரு வயிறு கடியும் தலையுருட்டல்
உற்ற பிற வீச்சு வலி சிலேற்பம் போமே.

பால வாத ராக்ஷதன் குளிகை.

அறைகிறேன் அதிமதுரம் கொட்டர்தானும்
அப்பனே திரிகடுகு இந்துப்பேலம்
குறைகிறேன் திரிசாதி கடுகு ரோணி
குணமான அரத்தையோடு அக்கிரு தேற்றன்
ஓறையான வெளிச்சிப் பீசின் வகையோரொன்று
சுகமாக கழஞ்சு நிறை சமனாய் கூட்டி
நிறைய வேதந்ததானுரைத்த பாம்பு காண்டம்
நலமான முசிறு முட்டை நில்வேர் தானே.

தாளு மயிலிறகு வடமும் கம்பளி
சார்வாக சுட்ட கரி கலந்து கொண்டு
மாகுக இடித்து வடிகொண்டு மைந்தா
மாட்டியவரை தோடையுட சாற்றுலாட்டி

ஊனை னூ தளத்தின் காய்போலுருட்டி
நிழலுலர்த்தியங்கே கொடுத்தப்பாரு
வானை சுரங்களொடு வெப்பு கிரானி
மாறிப்போம் கலை இருமல் மாறிப்போமே.

மாறிப்போம் சன்னி சுரம் இச்சியுள்ளி
மகத்தான சித்தரத்தை ஏலந்தன்னில்
மீறிவருஞ் சுரியனுக்கு அரத்தை இஞ்சி
இதமான மதுரம் திற்பிலி குழாய்த்தோடும்
கூறிவரும் அழச்சனுக்கு சீரம் முத்தம்
குணமான மாதளையின் பிஞ்சி கஷாயம்
ஏறிவரும் இருமலுக்கு சிற தேனிராட்டு
எழுந்து வரும் வாயுவுக்கு இன்றுஞ் சேளே.

சேளே நீ வெந்தயமும் வெளுத்தவுள்ளி கிழாயம்
கெட்ட மாந்தமது தொடர்ந்ததானல்
நாளே நீ மாத்தமிதின் கிழாயத்தூட்டு
நலமாகும் வெகு நோய்கள் தீரலாகும்
வாளே நீ அனுபானம் அறிந்து செய்தால்
வாராத பிணியனைத்தும் மருண்டு போகும்
கோளே நீ வராமல் சிறு வாதா ராகூந்தன்
கூறினேன் உலகமதில் சேய்க்குத்தானே.

தயிலம்.

உரைக்கவே இன்னுமொரு தயிலம் சொல்வேன்
உமையவள்க்கு உரைத்தபடி உலகத்தோர்க்கு
பொறுதியுடன் வல்லாரை சிறு நெரிஞ்சி
புகழான வில்வெலயிலை இசங்கு கையான்
சுருதியுடன் தோடையிலை மேனி வேளை
சொல் பெரிய தும்பை ரண்டு குழியில் மீண்டான்
கருதியுடன் விஷ்ணு வென்ற துவிதாளும்
கருத்தான அடிவணங்கி பருத்திதாளும்
தானை செருப்படி ஞ தளை நெரிஞ்சி
தளை கண்டங்காரி நொச்சி பேய்பீர்க்கு
ஊனை செச்செட்டி வேரும் இன்று
உரைத்தபடி மாவிலங்கு முருங்கைப்பட்டை
தேனை எருக்கு முருக்கிலையும் பட்டை

மிளகு தெளிவான தழுதாழை சங்கு புஷ்பம்
கோவை சாறு வகை சரியாய் கூட்டி
கொடிய நீர்பெண் செய்படி தாளென்றே.

ஒன்றே முலைப்பால் தானிரட்டி
இரு நீ நிலவேர் முசிறு முட்டை
நன்றே சொல்வேன் பெருங்கறையான்
நல்ல பாம்புக் கண்டமதும்
பன்றும் சுந்தரி அசிலொன்று
பழைய கம்பளி கரியதுவும்
வன்றும் பீலி வடமுடனே
வளைசேர் கோழி யொன்றதுவே.

தீ ஆமே சொல்லேன் கடைமருந்து
அடன்ராம் கிரிகருகு திரிகாதி
நாமே மதூரம் சிறு தேக்கு
நல்ல திரிபலை திரிசாறு
கோமே மிளகு சூத்திரிக்கும்
கொள்ளும் லிங்கம் தாரமுடன்
வேமே பேதி சிங்கியுடன்
வலம்புரி கொட்டம் சித்தரத்தை

அரத்தை வாய் விளங்கம் காயமிந்து
அடவே சாரம் கடுரோணி
பெருத்த ரோசனை புனுகுடனே
பேணி அருத்த அக்கிரவும்
நீத்து வகைக்கு கழஞ்சொன்று
நெருங்கவே இடித்துப் பொடியாக்கி
பருத்த முன் சாறு விட்டரைத்து
பஞ்பாய் எண்ணெயுடன் கலந்து
கலந்தே முலைப்பால் மருந்தெல்லாம்
கடிய பாண்டமதில் காச்சி
உலந்தே சுந்தரி அனில் கொத்தி
உடனே கோழி குடல் ரெத்தம்
மலந்தே வகையுடன் நொறுக்கி
மணமாய் கலந்து சாரேட்டே
நலந்தே கிண்டித்தான் காய்ச்சு
[illegible]

வடித்தயிலம் பாலகருக்கு உள்கொடுத்து உடலிலிடு

கடுத்த சுரங்கள் சன்னி முதல் காணுதோடும் வலிவெட்டு

படுத்த இக்கிள் மூர்ச்சையும் பரதாபங்களெல்லாம்

உடனே தீரும் இரை யாந்தம் உடலில் சீதம் சுழிரும்

சீதமுடனே தீருமென்று சிவனுர் தேவிக்குபதேசம்

வேதமுடனே சைந்தர்க்கு வெளியாய்ச்சொன்ன மந்திரத்தை

காதிளையார் சீர் சேய்களுக்கு கருத்தாய் உரைத்தோம் காரிழையே.

சிகப்பு தீர நெய்.

பெயரான சித்தர்கள் எல்லாம் சேர்ந்து பெருகவே ஒருகிருதம் பெல

மாய்ப் பேச பாராத கழுதைலொத்தி சாறழக்கு பாருமே

ஏரண்டெண்ணெய் ஈருழக்கு சேராத குப்பிச்சாறு தெற்றி செம்

பொன் சேர்ந்த பூவரசு செம்பருத்தி தானும் கேராத வெள்ள

றுகும் ஈரவுள்ளி கொண்டு விடு ஒருழக்கு குளமதாய் தானே.

தானுன சிவன் வேம்புச்சாறுழக்கு தக்கதேங்காய் பாலுழக்கு சரியதாக

மானுன சீனப்பா சிவந்த கூரை மார்க்கமுடன் திரிகடுகு ஏலம் பூரம்

ஊனுன கருஞ்சீரம் மதுரம் பூலா உள்ள ரெத்த சந்தனமும் உறுதியாக

வானுன வகைக்கு இடை சமனுய் வாங்கி வடிய அரைத்து எண்ணெயிலே
கலந்து காய்ச்சே.

சிகப்பு கரப்பன் சூலை கிரந்திக்கும் வேப்பின்பட்டை தயிலம்.

சொல்லுவேன் வேப்பினுட பட்டை தானும் தொகையாக இருநான்கு
பலம் நொறுக்கி

அல்லவே பதினுறு பலந்தானப்பு

அதில் விட்டு எட்டொன்ருய் குறுக்கி காய்ச்சி

நல்லவே ஏலமொடு கரிய சீர் கார்கோல்

நிலையான மஞ்சட்டி மிளகு கோட்டம்

மல்லவே வகைக்கு இரு கழஞ்சு வாங்கி

மகத்தான உருக்கெண்ணெய் படிதான் வாரே.

வாரமுடன் கஷாயமதில் கலந்து காய்ச்சி

வடித்திடு நீ மணல் பத்தில் வடிவாம் மைந்தா

தீராத சிகப்பு தொலகை கரப்பன் தீரும

குனத்து வரும் சூலையொடு குட்டந்தீரும்

ஓராத விரணங்கள் பொடிப்பு நல்ல

ஓய்ந்த செங்கிரந்தி கருங்கிரந்தி போகும்

ஞாராத சுடரொளி போல் சூக்ஷம் சொன்னேன்

சுத்த மாங்கிளிகை யொன்று கூறக்கேளே.

கரப்பனுக்கு நெய்.

அதிமதுரம் கெருடப் பச்சை கொத்தமல்லி

ஆய்ந்த கருஞ்சீரகமும் அளவாய் ஓமம்

விதிபுகழும் விழாலரிசி சுக்கு ஏலம்

மிகுந்த குடகப் பாலரிசி மிளகு சீரம்

பதிபுகழும் திற்பிலியும் வசம்பு வங்கம்

பகர் சிவனுத உள்ளி கழஞ்சொன்றங்கே

கெதிபாவின் நெய் நாழியதனில் சேர்த்து

இடியதை மூட்டியனல் வடித்திடாயே

வடித்து ஒரு கர்சிடை தான் சிறுவருக்கு

வளமாகக் கொடுத்துடம்பில் பூசு வீதம்

வெடித்திருந்த செங்கரப்பன் கடி விழுந்தான

வேரிளகும் கொத்தங் கொள்ளி சொறி கரப்பன்

ஊடுத்துடம்பில் பூசி வர பத்து நாள்தான்

குழவியுட மேனிப்புண்ணும் கூறினேன் கேள்

படிதனிலே குழவி தாய் பத்தியங்கள்

பழங்கஞ்சி குளிர்ந்த சலம் குளியும் மாற்றே

புட்டவியல்.

சொல்லுவேன் இன்னுமொரு புட்டவியல்

சுகமாக பிணி மலதும் தீர வேண்டி

நல்லதோர் முருக்குடனே முருங்கைபுட்டை

நலமான முசுட்டை வள்ளி வெள்ளவுள்ளி

தல்லவே படர்பருத்தி துளசி தும்பை

தயவான கத்திரியும் இசங்கு தோடை

தல்லவே ஆ தளையும் உள்ளிது நொச்சி

சுகமான அப்பட்டுக் குருந்து இன்டு

குருந்திஞெடு முத்தம் இஞ்சி நிலவேர் முட்டை

கண்டமாத ஊள இலையும் வில்வஞ் சேரு

பகிந்திளிருடு விஷ்ணுக் கிராந்தி குழியில் மீண்டாள்

பாங்குடனே கொழிஞ்சி வேர் சமவரிந்தெடுத்து
மருந்த வகை சித்தரத்தை திரிகடுகு மதுரம் மூலம்
முலையாள் பாலை விட்ட வித்துக் கொண்டு
வருந்த வித்துப் புழிந்த நீர்தனிலே மைந்தா
வாங்கியிதைக் கண்டூடும் தயிலம் மாத்திரை

மாத்திரைகள் பீலிவட்டம் சுட்டருந்தும் மோது
வருந்தான வாலை சுரம் முப்பத்தெட்டும் போச்சு
ரூத்திரமாய் வந்ததொரு கழிச்சல் கிராணி
சுமையுடனே சூரியனெடு மாந்த தோஷம்
கோத்திரமாய் சன்னி வகை கெதிகெட்டோடும்
கொடிதான அத்திசுரம் கணைகள் வெப்பு
நேத்திரமாய் பறக்குமப்பா தோஷம் மூர்ச்சை
நிசமாகத் தீருமென்று நிகழ்த்தினேனே.

முள்ளெளித் தயிலம்.

சேய்யென்ற பாலகர்க்கு இளைப்பதற்கு
செப்புகிறேன் முள்ளெலியின் தயிலங் கேளு
பேய் பிசுக்கு பெரு நெரிஞ்சி வேளை ஓ மீண்டின்
பெருந்தும்பை மாவிலங்கு சிறு நெரிஞ்சி
இஞ்சி வல்லாரை வில்லை தோடை
இன்டு நொச்சி கத்திரியும் கையான்மேனி
ஆய தும்பை புள்ளடியும் சித்திரப்பாலை
அப்பட்டு செருப்படியும் பொன்னெரிஞ்சி

நெரிஞ்சியொடு செஞ்சட்டி இசங்கு உள்ளி
நேர்த்தானித் தூதவளை இலையிஞ்சேடு
சேர்ந்தெடுப்பாய் வகைக்குச் சாறுமாக்கு ஒப்பம்
சிறப்பான முசிறண்டம் கோழி ரெத்தம்
பரிந்தெடுப்பாய் பெருங்கறையான் அவ்வீதந்தான்
பக்குவமாம் குழியானை மயிலின் பீலி
அரிந்திடுவாய் வடக்கயிறும் முள்ளெலியும்
அனில், புடமும் நச்செலி நிலவேர் கண்டம்
கண்டமுடன் கோழி நிணம் சரியாய் சேர்த்து
கழற்றுவேன் கடை சரக்கு அரத்தை வெப்பால்
வன்வாவமவாய் மன்லி............தாரம்

வால்மிளகு தக்கோலம் சிராம்பு லவங்கம்
சுண்ட மக்கிரு திற்பிலி மூலமதாய்
கடுக சிங்கியோடு பழுக்காய் கொட்டம்
பல்குலைவாய் வகை வகைக்கு கழஞ்சு மூன்று
கூட்டியே முன் சாறு விட்டு கூட்டே

ஆட்டியரைத்தெடுத்து கலக்கிச்சாறும்
அப்பனே நின்பெண்ணெய் படிதான் ரண்டு
தாட்டிகமாய் அடுப்பேற்றி பத்தில் வெந்து
கருகுடல் முறிபத்தில் வெந்நு வைத்து
காட்டியே தீயமொடு ஊ பம் செய்து
களிப்புடனே காசிடைதான் பாலர்க்கீயே
நாட்டிவே அநுபானம் அறிந்து நாக்கு
நலங்கெட்ட சன்னி சுரம் சேற்பம் போமே.

சிர நீர் குணம்.

நீரது சிரசிலேற்றி நொய்தாய் இருமி காட்டி
சேருமே அய்யந்தானும் சென்று கீழிறங்கி நின்று
கோரிய விலாவுரண்டும் கொதித்தய்யம் ஏங்கிச் கொள்ளும்
பாருமே எச்சியென்றும் மற்றும் விலாச்சுழியென்றே.

என்றதோராய்யந்தானும் எழும்பிடும் சவ்வு போல
நின்றது பற்றிக் கொண்டு நீரொடு கபமும் வாய்க்கும்
மூன்று மூச்செறிதல் முட்டு முக்கொடு சுரமுங் காட்டி
கால் கரப்பனுக்கு தொட்டிடத் தயிலம்:

பாலகர்க்கு காலில் வரும் கரப்பன் தீர
பாங்கான தயிலமொன்று பகரக் கேளு
சீலமுடன் சிறு குருக்கின் வித்திலேடு
சிந்தை கஸ்தூரியெனும் மஞ்சள் தானும்
கோலமுடன் இடித்ததனை உருக்கு நெய்யில்
கூருகக் கலந்து ரெவியில் வைத்து
வேலவனை சரணமென்று சேய் கால்தன்வில்
விதமாக பூசி வரகரப்பன் போமே.

பாலவாதத்துக்கு ஜாலியம் பட்டைத் தயிலம்.

கணபீசம்-சென்னக்காய் விதை.

நெடியமால் உலகில் சொன்ன நிசமான தயிலமொன்று
துடிகனவாயில் யத்தோல் ளாக்கு நீ பலந்தான் பத்து
துடிபுக்குறுணி ரண்டு குறுக்கி நாளுழியாக்
வடிய நல்லெண்ணெய் நின்பத்தயிலம் ஓர் படியதாக
விடிவுறக் கலந்து கொண்டு விளம்புவேன் மருந்து கேளே.

கேளப்பா கசகசா குருந்து நிம்பம்
கெண பீசம் கருஞ்சூரை சுடுகு மூன்றும்
நாளப்பா தேங்காய்ப்பால் தன்னிலிட்டு
நன்றாக அரைத்துருட்டி கலக்கிக் காய்ச்சி
மாளப்பா மூன்றும் நாள் மலல் பத்தில்
மசியது போலாக முறுகக் கண்டால்
வேளப்பா வடித்து தலைமெழுகும் போது
வெகுநோய்கள் தீருகிற விபரங்கேளோ.

விபரமுடன் வாதங்கள் நாற்பதும் போம்
வென்னீரில் முழுகி வர சூலை போகும்
மாவரமெனற நரம்பிசிகள் நடுக்கு வலி விரை
திமிர்ப்புடனே விறைப்பும்
காவரமென்ன கலை வாதம் இரு நாள்கும்
காலிலக்கும் ஓடிவிடும் விதை வீக்கந் தீரும்
கமலகுரு அருளிலுலே.

விஷ சுர மாத்திரை.

பேர்குமே விஷ சுரத்திற்கு இன்னுமொன்று
புகழான காந்தமொடு உருக்கிரும்பு
ஆகுமே கழஞ்சி ரண்டு திரிகடுகு
அழகான சித்தரத்தை நறுக்கு மூலம்
வேகுமே வெள்ளுள்ளி லிங்கம் தாரம்
வெகு சுருக்காம் திரிபலையும் வாளம் ரோணி
பாகுமே கெருடப் பச்சை ஓலைந்தாளும்
பகருவாய் வங்கக்கு ஒரு கழஞ்சு வாங்கே.

வாங்கிய மருந்ததனை சுத்தி செய்து
வரிசையுடனிடித்து வடிகெட்டிக் கொண்டு
நீக்கியே உருக்கிரும்பு சுத்தி மார்க்கம்
நிகழ்த்துவேன் பொற்றலைக் கையான் சாற்றில்

தூக்கியே நில்லாதே மருந்தையெல்லாம்
சூக்ஷமதாய் குழிந்தம்பி தன்னிலாட்டி
ஓங்கியே தேசிப் பழச்சாறு சாமமொன்று
உண்மையாய் அரைத்த பின்பு உரைக்கக் கேளே

கேளப்பா தோடைச்சாறு சாமம் ரண்டு
கேடில்லாதரைத்துருட்டி மிளகு போலெ
வாளப்பா நிழலிலுலர்த்தி மைந்தருக்குத்தான்
வரிசையாய் அநுபானம் வைத்தூட்டு
மாளப்பா மாறிப்போம் விஷசுரங்கள்
மகத்தான சன்னி வலி சுழி துரப்பு
வேள்ப்பா பால சுரம் எல்லாம் தீரும்
பைங்கொடியே இன்னமொன்று பகருவேனே.

குழி மீண்டான் தயிலம்.

குழந்தைகளுக்கு கபரோகம் சிலேற்பந்தீர
சூமான தயிலமது மீண்டான் வேளை
அளந்தவரி முருக்கு நொச்சி தும்பை மேனி
அப்பட்டு தூதுவளை ஆடாதோடை
தளந்தும்பை பேய் பிசுக்கு கண்டங்கத்திரி
கருவேப்பு உத்தமதாளி இன்டு இசங்கு இஞ்சி
வளந்த தூதளம் பழமும் முசிறு முஸிடை
வகைக்கு இடி சாறுவகை உழக்குதானே.

உழக்குதான் மேல் மருந்து வசம்பு உள்ளி
ஓமம் மஞ்சள் சிறுதேக்கு அரத்தி சிங்கி
உளக்கலிந்து திற்பிலியும் தரங்கொட்டம்
வாலுளுவாய் வலம்புரிக்காய் வடமும் பீலி
தளக்கான வால் மிளகு திப்பிலி மூலம்
சனிறுயகம் அக்கிறு நிலவேர் கண்டம்
பளக்கான கரும்புடமும் வகை வகைக்கு
பரிவாகக் கழஞ்சொன்று பொடித்துதீர் தூளே

தூளாக்கி வேப்பெண்ணெய் நாழி தன்னில்
சூக்ஷமாய் முன் சாறும் முயலின் ரெத்தம்
ஆழாக்கு அனிலொன்று எலிதானென்று

அருங் கோழி குடல் ரெத்தம் முள்ளெலிபுமொன்று
வாளான அடுப்பேற்றி எரித்து வற்றி
வாங்குகுடல் முறிபதம் வடித்துக் கொண்டு
தாளாக நோய்களுக்கு இஞ்சி நீரில்
தாக்கிடவே காசிடைதான் சாற்றக் கேளே.

சாற்றக் கேள் எச்சியொடு இருமல் எய்ப்பு
சன்னுமடா பொருமல் கபம் இளைப்பு ஈளை
வாற்றக் கேள் சிலேற்பமுடன் குவளை கெட்டு
வாங்கு மந்த் சுழியனொடு வலிகள் சன்னி
மாற்றிவிடும் பாலர் சுரம் முப்பத்தி ஆறும்
வாத வகையான வகை கபமெல்லாந் தீரும்
ஆற்றுமே குழி மீண்டான் தயிலம் சொன்னோம்
அகஸ்தீசர் குருநூல் ஐந்நூறு முற்றே.

கோரங்கிழங்கு கஷாயம்.

கோரங்கிழங்கு திரிசாதி கொடிய விடயம் துடிசுக்கு
ஆரம்பெரிய கருவாயும் அடவாம் சுரிய பலைநெட்டு
சீரகத்துடனே கொத்தமல்லி சிறு மாவிரையும் மாதளையும்
காரஞ்சுண்டை வற்றலுடன் கடி உலுவாய் அயமோதம்

மோதத்துடனே நெல்லிக்காய் ஒன்றும் வெதுப்பி கஷாயமிட்டு
பாதக்குடி நீர்தானருந்தில் பறக்கும் கிராணி அதிசாரம்
நீதக்கழிச்சல் வயிறளைவு நீங்கும் கடுப்பு உளைச்சல் முதல்
வேதப்படி கீரி முதல் வெகு நோய் போகும் கண்டீரே.

முப்பிறை சுமைக்கு முழுக எண்ணெய்.

மதுரம் காந்தம் தாரம் மஞ்சள் திற்பிலி கிராம்பு
சதுரமாம் கருஞ்சீரம் ஓமம் சனிகுயகம் கடுசாம்பிருணி
முதுமுசலெலியின் காட்டம் மிருசு மீரேமுங் கொண்டு
நிதானமாய் நகரைச்சாற்றிலரைத்து நீ கலக்கிக் கொள்ளே.

அரைந்ததைக் கலக்கி நின்றும் அனலிட்டு குரும்பை நெய்யில்
வரித்/திடப்பத்தில் வாங்கி மைந்தருக்குத் தலையில் பொத்தில்
இருந்த முப்பிறையின் கோஷம் இருமலோடிழைப்பு காச்சல்
நீ உரைத்ததோர் சுரப்பு சுக்கல் ஓடிடும் காசம்தானே.

மாதளாதி குளிகை.

தானென்ற தரணிமீதில் மதலைகளுக்கு
        சாற்றுகிறேன் வைத்தியரே நம்வாய் கேளும்
தேனென்ற மாதனைதான் சமூல மைந்தும்
        செப்புகிறேன் வல்லாரை முத்தக்காசு
வானென்ற பத்திரியும் கிராம்பு சுக்கு
        வளர் ஓமம் குரோசாணி மருதம் பட்டை
ஏனென்ற கருவேலம் பிசினும் கஞ்சா
        இந்துப்பு தான்றிக்காய் ஏலங் கூட்டே.

கூட்டுவாய் அபினுடனே சந்தம் ரண்டும்
        குணமான அதிவிடையந்தாலும்
நாட்டுவாய் இவை வகை சேர் கழஞ்சி ஒன்று
        நலமான காந்தமத கழஞ்சி ரண்டு
மாட்டுவாய் ஆட்டின்பால் தன்னுலாட்டி
        மைந்தனே ஏழுசாமம் அரைத்த பின்பு
தீட்டுவாய் குளிகைதனை உளுந்து போலெ
        திரட்டியே உருட்டியதை நிழலிலுலர்த்திதே.

உலர்த்தியே குளிகைதனை மாதளம் சாற்றில்
        உத்தமம் மூன்று பொழுதன் பீராகில்
கனைத்துவரும் வயிற்றளைச்சல் பொருமல் வாந்தி
        கழிச்சலுடன் கிராணி அதிசாரம் வெப்பு
புனைத்து வரும் சளிமாந்தம் கடுப்புமூலம்
        பொல்லாத கனை காச்சல் அக்கி காச்சல்
அணைந்து வரும் விருந்தாளரைப் போவோடும் சொன்னேன்
        அப்பனே இன்னுமொரு குளிகை கேளே.

சிலேற்பனம், சுழியன், எச்சி முதலானதுக்கு குழி மீண்டான்
    மாத்திரை,
சீர்கொண்ட சிலேற்பனம் சுழியனொடு எச்சிவகை
தீராத கபங்கள் முதல் தீரவே குழி மீண்டான் குளிகை கேளே.
சிறந்த நாகசுத்தை நீயும் பார்கொண்ட கட்டியதும்பலமொன்று
நீணுறு பகர்சிறுகலசமதில் வை பாங்காக சாரனைச்சாறு மூங்கவிடு
பகர்சிறு அடுப்பில் வைத்து நேராக வட்டிட்டடைத்ததிலே
முடியெரி நேசமாயுருகி வரவே கை கொண்டு அமர்த்திப்பிடித்திடு
சலியாமல், மலையாமல் பார் வாரத வற்றியே, பார்க்கை
வழிச்செடு [illegible] வால் விளை வ

திரிகடுகு வனம்பெறும் ஏலமுடனே, உடனே எடு நஞ்சறுத்தானுடையீ
வேர் சமம் உறுகுப்பை மேனி வேரும், உற்ற நல் குழி மீண்டால்
சாற்றில் அரைத்தெடு மருந்தையெல்லாம் திடத்துடனே பொடித்து
திடமான முன் வார்த்த பற்பம் கூட்டி திரட்டியரை கொங்கை
கறை பாலதில் விட்டரைத்துக் குன்றிமணி போல் திரட்டே
திரட்டிடத் தீரும நோய் கேள் மடமடென விலாவிலெச்சி குழி
கபம் சிலேற்பனம் மரமர குரு வெச்சி நடுவெச்சி முதல் மயங்
கியே ஓடிவிடும் பூங் ரானி முறையே.

சிறிய கேசரி நெய்.

கரப்பனென்ற வகையெல்லாம் கதறியோட
        கழுதைப்பால் நெய்யொன்று கருதிக் கேளு
நீரப்பா நங்கை சிவந்துள்ளி குப்பி
        நீர் கழுதை மலநீர் பொன்னெரிஞ்சியோடு
உரப்பான துளசி தெற்றி அறுகன் வேரும்
        உற்பனமாம் கழுதை பால் வகைக்குழக்கு
பார்ப்பான கருஞ்சூரை வேரும் சீனப்பரிட்டையோடு
        பகர்ந்த குக்கில் இரு சீரம்தானே.

தானிந்த கற்கவகை அரைத்துச் சேர்த்து
        சாதகமாய் மெழுகு பதம் தன்னில் வாங்கி
[illegible] ஊனமென்ற சிறு சேய்க்கு அருந்தும்போது
        உடலை விட்டு கரப்பனெல்லாம் கடலில் புக்கும்
மானென்ற பின் ஊதாய் பத்தியமேகாத்து
        மறுபத்தியம் தீர்ந்த தன்பின் முழுகச் சொல்லு
கோனென்ற குறுமுனிக்கு குழந்தைவேல் சொன்ன
        குணமான உபதேசம் பிசகிடாதே.

பெரிய கேசரி நெய்.

கரிமுகனடியை வாழ்த்தி கருவில் பிறந்த சேய்க்கு
மருவிய கரப்பனாலே மண்ணினில் மடிந்திடாமல்
அருவிய குமாரர்க்கீச்ன் அருள் செய்த அமிர்தம் தன்னை
தெரியவே புவியின் மீதே செப்புவேன் தீ மருந்து தானே.

தானான கருங்கழுதைப்பால் நாழி தகரைஇலைமொசுமொசுக்கைதுளசி
தெற்றி
ஊனான செம்பருத்தி சங்கன் குப்பி உறுகழுச்சி இலையுடனே மேனி
வேம்பு

தேனை படர்பருத்தி செல்வெருஞ்சி
சிறிய நங்கை பூவரசன் பட்டைதானும்
வானை கழுதை மலநீர் சிவர்த்தருள்ளி
வகை வகைக்குச் சாறுரிபால் நாழி சேரே.

சேரே நீ பசுவின் நெய் ஈருழக்கு
சிற்றே ரண்டத்தெண்ணெயது சமனாய்க் கூட்டி
பாரே நீ சீனப்பா பலந்தானென்று
பாங்கான வசம்பு கார்கோல் கிராம்பு
வேரான வெம்பாடம் சாதிலிங்கம்
வெள் கொட்டம் கருஞ்சீரம் ஏலம் சாதி
பாரே நீ திரிகடுகு கஸ்தூரி மஞ்சள்
பெலத்த குக்கில் துருசு தந்தம் இவைகள் தாக்கே

தாக்கிடுவாய் கெந்தகமும் மருந்தொன்றுக்கு
தக்க நிறை கழஞ்சு முக்கால் சரியாய் கூட்டி
நீக்கியே மும்பாவுடனே மருந்தையெல்லாம்
நிசமான பசுவின் பால் தன்னுலாட்டி
பாக்கியமாய் முன் சாற்றில் கலந்து கொண்டு
பாண்டமதில் நெய்யுடனே விளாவி கிண்டி
நீக்கிடுவாய் கமலாக்கினியிட்டெரித்து
விமலனுக்கும் வடுவனுக்கும் பூசை செய்து

செய்துடனே மெழுகு பதம் கண்டிறக்கி
சிறுக வடிபாத்திரத்தில் மருந்தைக் கேளு
மெய்ய புழுகு ரோசனையும் கல்மதமும்
மருந்தான
இருந்ததிலி கஸ்தூரி கற்பூரம் பச்சை

கைநிறையாய் வகைக்கு கால் கழஞ்சங்கிட்டு
கலசத்தில் நெய் வடித்துக் கரண்டிவீதம்
உய்யும் மடவாரீன்ற குழந்தைக்கீய
உலகத்தில் காணுது கரப்பன்தானே.

தானுன செங்கரப்பன் செங்காமாரி
சருவாங்கக் கரப்பனொடு வாத பித்தம்
மானுன சிலேற்பனமும் மண்டை நீர் கர்லான்
மகத்தான கொத்த ரோடகையும் கொள்ளி

தேமல் சொறி கரப்பன் படர் கரப்பன்
செங்கிரந்தி கருங்கிரந்தி செவ்வார் புற்று
ஊறல் உள் கரப்பன் பிறகரப்பன்
உதிர சுர கரப்பனொடு பறக்கும் பாரே.

பறக்குமென்றேன் ருத்திர சன்னி பயித்திய சன்னி
பறங்கியுடன் வெட்டை வகை எல்லாந் தீரும்
கறக்கமுறும் மைந்தருடன் தெளிந்து நல்ல
கணை கரப்பன் சஜுரவலில் கரப்பனோடு
நீர்க்கமுடன் மேகத்தின் கரப்பனெல்லாம்
நீங்கிடும் கரப்பன் வகை 55-மே.

அதிமூத்திரம் தாகம் மேகம் இவைகளுக்கு கஷாயம்

கருதரிய மேகபித்த வேர்வை தாகமும்
கசியும் நீரழிவு முதலாய
கனமான நோயெல்லாம் கண்டற்ற கன்றிட
கை கண்டதோர் கஷாயம்
பெருமை பெறும் பொன் குறண்டி
இனிய சிறு சுண்டையும், பேசரிய
மரமஞ்சளும், பாடகத்தாளிதேற்றுங் கருக்காய்தோடிலந்தைக்குரு
வருமாவிலங்கிப்பருப்பாடை முத்தமும் வளர் கருங்காலி வயிரம்,
வகையே வறட்டுப் பாக்கிஞ்சி கறி மஞ்சளும் வங்கமுமாம் இங்கு முதலாய்
சுருதி முறை தவறாது நிறையோர் கழஞ்செனை, தோய் மேரண்டுபடியே
சுத்தமாய் பாண்ட மலல் ஏற்றியனல் மூட்டியே, சேர்குரு பதத்தை
நாடே,

நாடவே படியொன்றதாக்கி இருபங்கு வைத்தொரு பங்கு
உழக்கதாக்கி நலமான தேனில் கலந்து முறையாகவே நவிலுமிரு
வேளையுண்ண, தேடவே பத்தியம் புளியிலிப்பது தள்ளு, தேக
மேலிட்டதாகம், சீறியது பொங்கிடில் படிபாகமே, கூறவே
போகின்ற நோயேது வறட்சையும், கொடிய நஷ்டப்பிர
மேகமும், குலையாத தாகமும் நிலையாகுமென்று முன் கொள்கை
யுணர்ந்த மேலோர், பாடவே பன்னிரண்டாயிரக்கோர்வை யிது,
பண்டிதர்க்கருள் பெருகவே, பண்பு பெறும் மெய்ஞான தேசிகன்
பொதிகையிலமர்ந்திடும் பண்பு பெற மகஸ்தீசனே.

வங்கம் — இலவங்கம்

[illegible] — பெ[illegible]

சித்த சீவாமிர்தம்.

அமுக்கூரம் முத்தல் 2, மதுரம் முத்தல் 2, பச்சை வல்லாரை இலை முத்தல் 4, இவை மூன்றையும் 32 படி தண்ணீர் விட்டு 4 படியாய் வற்றவைத்துக் கொள்க. சதாவேலிக்கிழங்கு 35 முத்தல், இதை இடித்து சாறெடுத்து வைத்துக் கொள்ளவும். பின் 10 முத்தல் கற்கண்டு சேர்த்து காய்த்து தேன் பத்தில் வடித்து வைத்துக் கொண்டு ½ முதல் 1½ அவுன்ஸ் வீதம் சாப்பிட நரம்பு தளர்ச்சி, இருமல், ஈளை, தொண்டை கரகரப்பு, நித்திரையின்மை, இருதய பலவீனம் ஆகியவை நீங்கு வதன்றியும் சுவாசப் பைகளையும் இருதய ஓட்டத்தையும் கிரமப்படுத்தும். மேலும் இதை பாலருக்கு ஒரு தேக்கரண்டி வீதம் கணை ரோகத்தில் கொடுத்து வரலாம். கக்குவான் இருமலுக்கும் கொடுக்கலாம்.

கெந்தக ரசாயனம்.

கெந்தகம் 1 பங்கு, அமுக்கூரம் கொடுவேலி, வேர், சீனப் பாவு, வசவாசி சிறு நாகப்பூ, சடமாஞ்சி, சாதிக்காய் கிராம்பு கற்பூரம் இவ்வகை 1 பங்கு சுத்தி செய்ய வேண்டியவற்றை சுத்தி செய்து கெந்தகம் கற்பூரம் நீங்கலாக மற்ற சரக்குகளை சூரணம் செய்து பின் கெந்தகத்தை அரைத்து சூரணம் செய்து ரண்டையும் நன்றாகக் கலந்து பின் கற்பூரத்தை கொஞ்ச சூரணத்தோடு கல்வத்திலிட்டரைத்து எல்லா சூரணத்தோடும் கலந்து வைக்கவும். டோஸ்-ம் 10 - 20 grains. அனுபானம்: நெய், தேன், சர்க்கரை. சர்மரோகங்கள் மேகரோகங்கள், பல வகை குட்டம், மேகப்புண், படை மேக கிரந்தி, ஆரம்ப புற்று ரோகங்கள் கொறுக்கு ரோகம் பீச ரோகங்கள், யோனி விரணம், கண்டமாலை, மேக வாத ரோகங்கள், வாதப் பிடிப்பு, கை கால் உளைவு, இவை போக்கி தேக பலத்தையும் வனப்பையும் ஒளியையும் கொடுக்கும்.

சித்தாதி எண்ணெய்.

Omit

சீர் சிறந்த உடல்தனிலே கவிச ரோகம்
　　சிரசுகளிலே குடியிருந்த மற்ற ரோகம்
பார்தனிலே விழுந்தெழுந்த சூலை ரோகம்
　　பம்பரம் போலாடுகின்ற நீராம்பல் கட்டி
நீரிழிந்த கற்கூடும் நீர்மலத்தின் கட்டும்
[illegible]

பேர் பொருந்தும் பெரும்பாடு நாவடைப்பு
பின்னுமோ சூலையொடு பவுத்திரந்தானே.

தானென்ற தலையடிகள் வாயில் புண்ணு
தரும்புகின்ற கண்ணெரிவு ஊதுவாயுவும்
ஊனென்ற உயிரெழுந்த குடிபோகந்தான்
உத்தமனே என்னையொன்றுரைக்கக் கேளு
வேனென்ற காயமொடு உள்ளி வாளம்
மைந்தனே வெங்காரம் காட்டெருமைப்பாலும்
கானென்ற கடுக்காயும் இந்தப்பாரும்-
கழுத்த கொரு சீரகமும் சுக்குஞ் சேரே.

சேரே நீ திசுக்கு ஓர் கழஞ்சு
சேகரமாய் வாளமொடு பலமொன்றும்
காரே நீ உள்ளிச்சாறு கணக்காய் வாங்கு
கடுக்காயும் அப்படியே வாங்கு வாங்கு
சேரே நீ சிற்றேரண்டெண்ணெய் சேராகும்
சிறப்பான தேங்காய் பால் சேரெட்டாகும்
வாரே நீ வேலிப்பருத்திச்சாறும்
வகையாக சேரெட்டு வாங்கு வாங்கே
வாங்கியே சரக்கையெல்லாம் மைபோலாட்டி.

எல்.வி. *******************

omit

Verified with the original manuscript
Completed on 4th July 1962.

4.7.62

4.7.62

4.7.62